Registered as a News paper    பக்கங்கள் - 08    விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு    மக்கள் நாளிதழ்

Eezhanatham

இலவச பிரதி

நாதம் 01    திருவள்ளுவர் ஆண்டு 2035    வைகாசி 26    08. 06. 2004    செவ்வாய்க்கிழமை    ஓசை 32




# ஜனாதிபதியின் அசமந்த போக்கை கண்டித்து யாழ் நகரில் பேரணி!

(நமது நிருபர்)

**தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு சிறிலங்கா அரசுப் படைகள் தொடர்ந்து விதித்துவரும் தடைகளைக் கண்டித்தும் இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் மீள்குடியமர்வை வலியுறுத்தியும், தென் தமிழீழத்தின் உண்மை நிலவரங்களை உரைக்கின்ற தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் மீதான படு கொலைகளைக் கண்டித்தும் யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.**

இப்பேரணி நடத்தப்படுவதை முன்னிட்டு யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சிறிலங்கா அரசுத் தலைவி சந்திரிக்காவின் நழுவல் போக்கினால் இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் தடைப்பட்டதுடன் தீர்வு முயற்சி கேள்விக்குறியாகியுள்ளது.

சிறிலங்கா அரசபடைகள் தொடுத்த போரினால் பெரும்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஏறாவூரில் மறைத்துவைத்த ஆயுதம் பொலிசாரால் மீட்பு

(எஸ்.நிலாந்தன்)

ஏறாவூர் ஐந்தாம் குறிச்சியில் மறைத்து வைத்திருந்த இயந்திர துப்பாக்கி மற்றும் பொருட்களையும் ஏறாவூர் பொலிசார் கண்டெடுத்துள்ளனர்.

நேற்று பகல் பொலிசாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று தேடுதல் நடத்திய போது ரி. 56 ரகத் துப்பாக்கி ஒன்றும் அதற்குரிய மகசின்கள் மற்றும் துப்பாக்கி ரவைகள் என்பவற்றையும் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர்.

## மட்.தனியார் சிற்றூர்தி பணியாளர்கள் பிணைமனு நீதிமன்றில் நேற்று நிராகரிப்பு!

### -மட்.சிற்றூர்தி சேவை பாதிப்பு-

(சி.பி.ஹரிச்சந்திரன்)

மட்டக்களப்புக் கடையுடைப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட தனியார் சிற்றூர்தி சாரதி, நடத்துனர்கள் விடுதலை செய்யப்படாததை தொடர்ந்து நேற்றும் மட்டக்களப்பில் இருந்து குறுந்தூர தனியார் சிற்றூர்திகள் சேவையில் ஈடுபடவில்லை.

மட்டக்களப்பு தனியார் சிற்றூர்தித் தரிப்பிடம் வெறிச்சோடிக் காணப்பட்டது. பயணிகள் போக்குவரத்திற்காக மிகுந்த சிரமங்களை எதிர் நோக்கினர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தனியார் சிற்றூர்தி சாரதி நடத்துனர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு நேற்று இதன் பணியாளர் சங்கத்தால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டது.

இம்மனு தொடர்பாக பொலிசார் ஆட்சேபம் தெரிவித்தையடுத்து மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் ஏ.எச்.எம்.அஜ்மீர் மனுவை நிராகரித்ததுடன் எதிர்வரும் 14ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

தனியார் சிற்றூர்திகள் போக்குவரத்தில் இடம்பெறாததால் பொதுமக்கள் சிரமங்களை எதிர் நோக்கினர்.

## மட்.அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கல்வி செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்

(தாசன்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கல்விப் பிரிவின் செயற்பாடுகள் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் எதிர்வரும் 10ம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அதன் துணைப் பொறுப்பாளர் எஸ். தாயகன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் அண்மைக்காலமாக இடம்பெற்ற அசாதாரண நிலையினையடுத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஜப்பானிய தூதுக்குழு நேற்று அம்பாறை விஜயம்

(எ.எல்.றமீஸ்)

ஜப்பான் அரசின் தூதுக்குழுவினர் நேற்று அம்பாறை மாவட்டத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தச் சூழ்நிலைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்ட இம்மாவட்டத்தின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கத்துக்கு ஜப்பான் நாட்டின் உதவியை வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவே மேற்படி குழு இங்கு விஜயம் செய்திருந்தது.

இலங்கைக்கான ஜப்பான் நாட்டுத்தூதுவராலயத்தின் பொருளாதாரக் கூட்டுத்தாபனத்தின் முதலாவது செயலாளர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஹேரத் அபேயவீரவை அவரது அலுவல

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## சுகாதார சேவை பணியாளர்கள் இருநாள் பணிபுறக்கணிப்பு போராட்டம்!

### மட்.அலுவலகம் முன்பு மறியற் போராட்டம்

(சி.பி.ஹரிச்சந்திரன்)

நாடு பூராகவுமுள்ள சகல சுகாதார சேவை பணியாளர்கள் யூன் 9ம்,10ம் திகதிகளில் சுகயீன விடுமுறையில் பணிப்புறக்கணிப்பில் குதிக்கவுள்ளனர். வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார சேவை பணியாளர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரியே இப் போராட்டம் நடாத்தப்படவுள்ளது.

கடந்த மாதம் 19ம், 20ம் திகதிகளில் நடைபெற்ற சுகயீன விடுமுறைப் போராட்டத்தைத் தொடர்ந்து 5 மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் பணியாற்றும் சுகாதார சேவை ஊழியர்களுக்கு சம்பள முரண்பாடு நீக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. ஆனால் வடக்கு கிழக்கு மாகாண சபையின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு எந்தவிதமான உறுதி மொழியும் வழங்கப்படவில்லை. வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு எடுக்கவுமில்லை.

நாட்டில் உள்ள மற்றைய மாகாண அமைச்சுக்கள் இந்த விடயத்தில் எடுத்த நடவடிக்கைகளைப் பார்க்கும் போது இந்த விடயத்தில் வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவை ஊழியர்கள் புறக்கணிப்புக்குள்ளாகின்றார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மத்திய அரச மற்றும் மாகாண சுகாதார பணியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு முன்னாள் யூன்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மட்டக்களப்பு கொம்மாதுறை படைமுகாமூடான மாணிக்கப்பிள்ளையார் வீதியை திறந்து விடுக!

(எஸ்.நிலாந்தன்)

மட்டக்களப்பு கொம்மாதுறை படைமுகாமூடாக மாணிக்கப்பிள்ளையார் வீதி புரிந்துணர்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இற்றைவரை திறக்கப்படவில்லை என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கொம்மாதுறை, சிரட்டையன்குடா கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட போக்குவரத்துப் பாதையான இவ்வீதி நீண்டகாலமாக திறக்கப்படாமையினால் பொது மக்கள் பயணம் செய்வதில் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

எனவே இவ்வீதியை மீளத்திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்கள் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

## --- ஏறாவூர் பொலிசாரால் --- ஆவனங்கள் இல்லாத இரு மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல்

(எஸ்.நிலாந்தன்)

ஏறாவூர் பொலிசார் நேற்று மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது ஆவனங்கள் எதுவுமில்லாத இரு மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## இடைவிலகிய மாணவர்களை இணைக்க விழிப்புணர்வு பேரணி!

(எம்.யுவராஜ்)

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு கல்வி வலயத்தினால் பாடசாலையைவிட்டு இடை விலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைப்பது தொடர்பாக பெற்றோர்களை விழிப்புணர்த்தும் பேரணி நேற்று கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு போன்ற இடங்களில் நடைபெற்றது.

அரசடித்தீவு விக்கினேஸ்வரா மகா வித்தியாலய மாணவர்களும், கொக்கட்டிச் சோலை இராமகிருஸ் ணமிசன் வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## செய்தித் துளிகள்

### பொலிஸ் அத்தியட்சகர் இடமாற்றம்

(எஸ். நிலாந்தன்)

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றி வந்த தம்பிந்த கடந்த வெள்ளிக் கிழமையிலிருந்து ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு பதில் பொலிஸ் அத்தியட்சகராக இருகல என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். பொலிஸ் அத்தியட்சகர் தம்பிந்த பல வருடங்களாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### புதிய வீதிச் சமிக்கைகள்

(எஸ். நிலாந்தன்)

வீதி விபத்துக்களைத் தடுக்கும் முகமாக ஏறாவூர் நகரில் புதிய வீதிச் சமிக்கைகள் நடப்பட்டுள்ளன.

ஏறாவூர் போக்குவரத்துப் பொலிசாரால் மேற்கொள்ளப்படும் இவ்நடவடிக்கை காரணமாக வீதி விபத்துக்களை தடுக்க முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. இதே போன்று செங்கலடி வாழைச்சேனை போன்ற நகரங்களிலும் நிறுவவுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

### தையல் இயந்திரம் அன்பளிப்பு

(தாசன்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா 2003ம் ஆண்டிற்கான தனது நிதி ஒதுக்கீட்டின் மூலம் நாவிதன் வெளிப்பிரதேச செயலகப் பிரிவிற்கு 23 தையல் இயந்திரங்களை அன்புளிப்புச் செய்துள்ளார். அண்மையில் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற்ற இந்நிகழ்வில் தையல் பயிற்சி நெறிகளை முடித்துக் கொண்ட யுவதிகளுக்கு 18 தையல் இயந்திரங்களும் நாவிதன் வெளிப்பிரதேச தையல் பயிற்சி நிலையத்திற்கு 5 இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

### வீதி புனரமைப்பு

(தாஸன்)

நீண்ட காலமாக பழுதடைந்த நிலையில் காணப்பட்ட மண்டூர் சவளக்கடை வீதி நெக்கோட் நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் புனரமைக்கப்படவுள்ளது.நாவிதன் வெளிப்பிரதேச செயலாளர் கோபாலரெட்ணம் பல அதிகாரிகளிடம் முறையிட்டதன் காரண மாகவே இதன் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்துள்ளன. இப்பாதையூடாக நாவிதன்வெளி அன்னமலை.இதன் புனரமைப்புவேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. 7ம் கிராமம் , 15ம் கிராமம் மத்திய முகாம், தம்பலவத்தை, பாலமுனை, மண்டூர் , 13ம் கிராமம் போன்ற மக்கள் பல சிரமத்திற்கு மத்தியில் பயணம் செய்வதும் குறிப்பிடத்தக்கது.

### குடி நீர் தட்டுப்பாடு

(எம்.யுவராஜ்)

வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கரையாக்கந்தீவு, மண்டபத்தடி, புதுமண்டபத்தடி , கொத்தியாபுலை, காஞ்சுரங்குடா பகுதிகளில் குடி நீர்த் தட்டுப்பாடு நிலவுவதால் பொதுமக்கள் பெரிதும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். தற்போது இப்பிரதேசங்களில் வரட்சியான காலநிலை நிலவுவதால் இங்குள்ள கிணறுகள் குளங்களிலுள்ள நீர் மட்டம் வற்றியும், குறைந்தும் காணப்படுகின்றது. இதனால் தாம் குடியிருக்கும் பகுதியிலிருந்து நீண்ட தூரத்திற்கப்பால் சென்றே பல சிரமத்திற்கு மத்தியில் குடிநீரைப் பெற்று வருகின்றனர்.

### பாதுகாப்புக் கெடுபிடிகள்

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையையடுத்து பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரித்துக் காண ப்படுகின்றது இதனால் பொலிசார் , இராணுவ த்தினரின் சோதனைச்சாவடிகளின் பொது மக்கள் மீதான சோதனைகள் அதிகரித்துள்ளது வவுணதீவு, செங்கலடி., பட்டிருப்பு மண்முனை போன்ற சோதனை சாவடி ஊடாக பொது மக்களின் பொதிகள் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்படுவதுடன் மோட்டார் சைக்கிள், ஏனைய வாகனங்களில் வாகன அனுமதிப்பத்திரங்கள் சோதனைக்குள்ளாக்கப்படுகிறது..

# எமது விடுதலைப் போரின் நியாயத்தை உலகறியச் செய்வது எழுத்தாளர் கடமை

## புதுவை இரத்தினதுரை

(நமது நிருபர்)

விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை உலகிற்கு எடுத்துச் சொல்லும் கடமை இலக்கிய படைப்பாளர்களுக்கு உரியது.இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை. நேற்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மலையகம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த எழுத்தாளர்கள் பங்குகொண்ட கலந்துரையாடலிலேயே அவர் இக் கோரிக்கையினை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- எமது விடுதலைப் போராட்டம் நல்லதோர் இடத்தில் வந்து நிற்கிறது. தொடர்பாக அதன் நியாயப்பாடுகளை உலகின் கண்களுக்குக் கொண்டு செல்வது இலக்கியப்படைப்பாளர்களின் முக்கிய பணியாகும். எழுத்தாளர்கள் என்றும் இன, மத, பேதம் பேணக்கூடாது. நாம் சிங்கள எழுத்தாளர்களின் நூல்களை வவுனியாவில் வெளியிட உள்ளோம். ஆகவே, எழுத்தாளர்கள் தர்மத்தின் வழியில் நின்று உண்மையான படைப்புக்களைப் படைக்க வேண்டும்.கடந்த காலத்தில் வன்னியில் போராளிகளும், மக்களும் இராணுவ முற்றுகைக்குள் எதிர்கொண்ட துன்பங்கள் முழுமையான இலக்கியப் படைப்புக்களாக வெளிவரவில்லை. இதற்கு முக்கியகாரணம் உண்மைகள் வெளியில் வரவில்லை. போராளிகள் தமது இலக்கியப் படைப்புக்களில் போராட்ட வரலாறுகளையும் மக்களின் துன்பங்களையும் வெளிக்கொணர்ந்த போதும் அது முழுமை பெறவில்லை.

இன்று எல்லோரும் தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்கள் என்று பிரித்துச் சொல்லும் இயல்பு உள்ளது.நான் அவ்வாறு பார்க்கவில்லை. தமிழ் எழுத்தாளர்கள் என்று மட்டுமே பார்க்கிறேன்.சில காலத்தில் நிகழ்ந்த தவறுகளை வைத்துக்கொண்டு எதையும் பிரித்துப்பார்க்க முடியாது. சமாதான காலத்தில் எல்லோரும் ஓர் இடத்தில் சந்திக்கின்றோம். இது மகிழ்ச்சிக்குரியது. இனி நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று தெரிவித்தார் புதுவை இரத்தினதுரை.

# தமிழ் ஊடகவியலாளர்கள் அபாயகரமான சூழலில் பணி புரிகிறார்கள்

## பத்திரிகைத்துறை சமூகம் கண்டனம்

(நமது நிருபர்)

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் இரக்கமற்ற கொலையானது, குழப்பம் நிறைந்த பிரதேசங்களில் பணிபுரியும் ஊடகவியலாளர்கள் எவ்வளவு கஷ்டமான. அபாயகரமான சூழ் நிலைகளில் பணிபுரிகிறார்கள் என்பதை வெளிப்படையாக எடுத்துக் காட்டுகிறது. இலங்கை எடிட்டேர்ஸ் கில்ட்', இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் பத்திரிகைத்துறைச் சமூகம் ஆகியவை கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகை வாசிப்போருக்குத் தகவல்களைக் கொடுப்பதற்காகத் தமது அன்றாட கடமைகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் பத்திரிகையாளர்கள் இந்த நிலைக்கு ஆளாகிறார்கள். இச்சம்பவம் குறித்து பத்திரிகைத்துறைச் சமூகமும், பத்திரிகை ஆசி ரியர் களின் கழகமும் மிகவும் கவலைய டைந்துள்ளன. சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரத் தரப்பினால் இன்னமும் இச்சம்பவத்தில் தொடர்புடையவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் இருப்பது குறித்து நாம் மிகுந்த கவலையடைந்துள்ளோம். இந்த விடயம் தொடர்பாக அரசியல் தலைமைகளும், அரசுத் தலைவர்களும் இன்னமும் மௌனம் சாதித்துவருவதையும் நாம் கவலையுடன் அவதானித்து வருகின்றோம்.

இவ்வாறு தெரிவிக்கும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது நடேசனின் கொலை பற்றி விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும். நாட்டின் எந்தப் பகுதியில் கடமை புரிந்தாலும் பத்திரிகையாளர்கள் பாதுகாப்புடன் பணியாற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும். பத்திரிகையாளன் மீது நடத்தப்படும் தாக்குதலானது ஜனநாயகத்தின் மீதும் கருத்துச் சுதந்திரத்தின் மீதும் நடத்தப்படும் தாக்குதலாகும். ஒரு பத்திரிகையாளனின் கொலை சுதந்திர சமூகத்தின் அடிப்படையான இரு உரிமைகள் மீதும் நடத்தப்பட்டுள்ள மரண அடியாகவே கருதவேண்டும். இந்தக் கொலையைப் புரிந்தவர்கள் யாராக இருந்தாலும் இந்த நாட்டில் சுதந்திரத்தை நேசிக்கும் சகல மக்களாலும் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். இவர்கள் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக நீதியின் முன்நிறுத்தப்படவேண்டும். இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சர்வதேச மாணவர் பேரவைக்கு புதிய தலைவராக பகீரதன்

(நமது நிருபர்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவராக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் ப.பகீரதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-சர்வதேசத் தமிழீழ மாணவர் பேரவையின் புதிய தலைவர் தெரிவு கடந்த மூன்றாம் திகதி வியாழக்கிழமை பேரவையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் மாணவர் பேரவை முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செ. கஜேந்திரன் மற்றும் மாணவர் பேரவை இணைப்பாளர் ந.கண்ணன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொ ண்டனர்.

இதில் புதிய தலைவராக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர் ப.பகீரதன் தெரிவுசெய்யப்பட்டார். ப.பகீரதன் கடந்த சனிக்கிழமை தொடக்கம் மாணவர் பேரவையின் தலைவராகச் செயற்படுவார். இவர் கடந்த காலங்களில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட பொங்குதமிழ் போன்ற நிகழ்வுகளிலும் ஏனைய இன விடுதலைக்கான அகிம்சை வழிப்போராட்டங்களிலும் முன்னின்று செயற்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடலில் பிரவேசிக்கின்றனர்

(நமது நிருபர்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் மீண்டும் அத்துமீறி மீன்பிடித்து வருகின்றனர் என்று மன்னார்ப் பகுதி மீனவர்கள் கூறியுள்ளனர்.இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடித்து வந்ததால் பிரச்சினை எழுந்தது. இதனையடுத்து கடந்த மாதம் இரண்டு தரப்புகளுக்கும் இடையே பேச்சு நடந்து - உடன்பாடு ஒன்று எட்டப்பட்டது.

ஆனால், இந்திய மீனவர்கள் அந்த உடன்பாட்டை மீறி வருகின்றனர் என்று மீனவர்கள் கூறியுள்ளனர். இது தொடர்பாக மன்னார் மீனவர் சங்கத் தலைவர் சொசாண்பி தெரிவித்ததாவது:-இந்திய மீனவர்கள் இப்போதும் வாரத்தில் மூன்று நாட்கள் இழுவைப்படகுகள் மூலம் எமது பகுதிக்குள் வந்து மீன்பிடிப்பதனால் எமது மக்களுக்கு ஏற்படும் கஷ்டம் மற்றும் பிரச்சினைகள் குறித்து அவர்களுக்குத் தெரிவித்திருந்தோம். அதற்கு அவர்கள் எமது பகுதிக்குள் தாம் மீன்பிடிக்க அனுமதிகேட்டார்கள்.

முன்னர் செய்த ஒப்பந்தத்தை மீறி அவர்கள் தற்போது எமது பகுதிக்குள் வருவதை சுட்டிக்காட்டினோம்.இவ்வாறு எமது பகுதிக்குள் நுழையும் மீனவர்கள் இராமேஸ்வரம், தங்கச்சிமடம், தனுஸ்கோடி, தாண்டவம் போன்ற பகுதிகளில் இருந்து வருகின்றனர். நூற்றுக்கணக்கான படகுகள் இப்படி வந்துபோகின்றன என்று மீனவர்கள் கூறுகின்றனர்.இது தொடர்பாக நாங்கள் எமது மாவட்டக் கடற்றொழில் பணிப்பாளரிடம் தெரிவித்துள்ளோம். அடுத்தமாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கை மீனவர்கள் சார்பாக இந்தியாவிற்குச் சென்று, ஓர் ஒப்பந்தம் செய்வதாக கூறப்படுகிறது. ஆனால், அவ்வாறு குறிப்பிட்ட சில நாட்களிலேயே பேசிய பேச்சை இந்திய மீனவர்கள் மீறி உள்ளமையினால், நாம் எவ்வாறு அவர்களைப் போய்ச் சந்திப்பது என்ற கேள்வி எழுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக நான் - யாழ். மாவட்ட கடற்றொழில் சமாசத் தலைவர் தவரட்ணம், வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் சூரியகுமார் ஆகியோரிடமும் தெரிவித்துள்ளேன். அவர்களும் இராமேஸ்வர மீனவர் சங்கத் தலைவரிடம் தெரிவிப்பதாகக் கூறியுள்ளனர் என்றார். எமது பகுதிக்குள்ளேயே எமது மீனவர்கள் மீன்பிடிக்கும் உரிமையானது இந்திய மீனவர்களின் தலையீட்டினால் மீறப்பட்டு வருகின்றது. இது எமது மக்களுக்கு ஒரு தீராத பிரச்சினையாகவே இருந்து வருகின்றது என்றார் அவர்.

### தகவல் தொழில் நுட்பத்துறைக்கு மாணவர்கள் அதிகரிக்கப்படுவர்.

(நமது நிருபர்)

தகவல் தொழில்நுட்பத்துறையில் மாணவர்களின் எண்ணிக் கையை இவ்வருடம் அதிகரிப்பதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. தற்பொழுது 310 பேர் வரையிலான மாணவர்கள் தகவல் தொழில் நுட்பத்துறையில் பயின்று வருகின்றார்கள். இந்த எண்ணிக்கையை அறுநூறாக உயர்த்துவதற்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு விரும்புவதாக ஆணைக் குழுவின் பிரதித் தலைவர் பேராசிரியர் எல்.எல். ரட்ணநாயக்கா தெரிவித்துள்ளார். தற்பொழுது கொழும்பு, களனி. பேராதெனிய மற் றும் மொறட்டுவ பல்கலைக்கழகங்களில் தகவல் தொழில் நுட்பம் கற்பி க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# மிதிவெடி அகற்றும் தனியாருக்கு உரிய பயிற்சிகள் அவசியம்

(நமது நிருபர்)

சூடாநாட்டில் மிதிவெடிகள் மற்றும் வெடிபொருள்களை அகற்றும் பணியில் ஈடுபடும் ஆட்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. உரிய பயிற்சிகள் இல்லாத நிலையில்-பெரிதும் ஆபத்துக்களின் மத்தியில் சில குழுக்கள் தனியார் காணிகளில் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன. மிதிவெடி அகற்றும் அமைப்புக்கள் தனியாருக்குச் சொந்தமான காணிகளில் மிதிவெடிகளை அகற்றுவதற்கு தாமதம் காட்டி வருவதால் காணி உரிமையாளர்கள் மேற்படி குழுக்களின் உதவியை நாடி வருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

# தமிழர்களின் கல்விக்கு ஆப்புவைக்கும் நடவடிக்கையை அரசு நிறுத்த வேண்டும்

## தமிழீழ மாணவர் எழுச்சிநாள் பிரகடனத்தில் வலியுறுத்தல்

(ச.மயூரன்)

காலம் காலமாக போரின் வடுக்களில் இருந்து இன்னும் முற்று முழுதாக இயல்பு வாழ்க்கையினை அடையாத நிலையில் ஒட்டு மொத்த தமிழர்களும் எதிர்பார்ப்புகளுடன் இருக்கின்றோம். வாழ்வின் அனைத்து சுகங்களை யும் இழந்து யுத்த நிறுத்த சூழலிலும் அகதிகளாய் அலைந்து வருகிறோம் இது எவரிட்ட சதி?

இவ்வாறு வன்னி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை விடுத்துள்ள தமிழீழ மாணவர் எழுச்சி நாள் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தாயகத்தில் தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்பதே எமக்கு விதிக்கப்பட்ட விதியாச்சு, இதை விடுத்து கூனிக் குறுகிப் போவதற்கு தமிழர்கள் ஒன்றும் தன்மானமிழந்து போகவில்லை

கடந்த யூன் 6ம் திகதி தமிழீழ மாணவர் எழுச்சி நாள் தமிழீழ போராட்டத்தின் அத்திவாரம் தாயகவிடிவிற்காக விதைக் கப்பட்ட நாள். இந்நாள் தமிழீழ மாணவர் எழுச்சி நாளாக பிரகடனப்படுத்தப்பட்டு மாணவர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தமிழ்த்தேசியத்திற்கா கவும் தமிழ் மாணவர் விடுதலைக் காகவும் இன்றுவரை முன்னெடுக்கப்படும் இப்போராட்டத்தில்தமிழ் மாணவர்கள் இன்னும்விடுதலை பெறவில்லை. ஏகாதிபத்தியங்களும் பேரினவாதிகளும் எமது தேசியத்தை மட்டுமல்ல தமிழர்களுக்கு உரித்தான கல்வியையும் நசித்து விட இன்னும் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது.

தமிழர்களின் கல்வியில் தரப்படுத்தல் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளியில் வேறுபாடு தமிழர்களுக்கு உரித்தான கல்விச்சாலைகளில் திட்டமிட்டபடி அதிகமாக சிங்கள மாணவர்களை சேர்த்தல் என்பது எமது தாயகப் பகுதியை மெல்ல மெல்ல விழுங்கி தமிழர்களின் கல்விக்கு ஆப்புவைத்து எமது தேசியப் பலமான கல்வியைச் சிதறடிக்க திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது.

இந்த நிலை எமது தாயகப் பிரதேசங்களில் இருந்து அகல வேண்டும். இவைகளுக்கு எதிராக உரத்த குரலெடுத்து பேரினவாதத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்துவோம்.

இன்னும் மரங்களின் கீழிருந்து கல்வி கற்கும் அவல வாழ்வு தேவையா? மாற்றான் மகிழ்ந்திருக்க தமிழர்கள் அடிமையா? எவரிட்ட சட்டமிது?

தாயகத்தின் விடிவிற்காய் மரணித்துப்போன மாணவ மறவர்களின் கல்லறைகளில் சத்தியம் செய்து தமிழ் மாணவர்கள் நாம் எழுவோம் எமைத்துரத்திடும் தடைகளை உடைத்தெறிய எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க தமிழ் மண்ணின் மீது சத்தியம் செய்தொரு விடியலமைக்க, தமிழ் மாணவர்கள் அனைவரும் உரத்த குரலெடுத்து பேரினவாதிகளுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் எமது நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து எமது உணர்வுகளை வெளிப்படுத்த அனைவரையும் அணிதிரளுமாறு அழைக்கின்றோம்.

# உலக வங்கித் தூதுக்குழு கிழக்கு மாகாணம் விஜயம்

(விரி.சகாதேவராஜா)

போரினால் பாதிக்கப்பட்ட பகுதியில் வீடமைப்புத் திட்டங்களை ஏற்படுத்தஉலகவங்கித் தூதுக்குழுவொன்று வியாழனன்று கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தது.

திட்டத்தின் பணிப்பாளர் எஸ்.எம். குருஸ் தூதுக்குழுவிற்குத் தலைமைதாங்கி மட்டு. அம்பாறை பகுதிகளுக்கு விஜயம் செய்தார்.

அந்தந்த மாவட்ட கச்சேரிகளில் அரச அதிபர்களுடன் கலந்துரையாடலை நடாத்திய தூதுக்குழுவினர் வீடமைக்கப்பட வேண்டிய இடங்களையும் பார்வையிட்டனர்.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் ஹேரத் அபேவீரவை கச்சேரியில் சந்தித்த குழுவினர் திருக்கோவில் பிரதேசத்திற்குச் சென்றனர். ஏ.கே. தவராஜா அழைத்துச் சென்று காட்டினார். அங்கு 34 வீடுகள் அமைக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க இராணுவ குழு இலங்கைக்கு வருகிறது.

எதிர்வரும் 12 ஆம் திகதி இலங்கையில் ஆரம்பமாகவுள்ள கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்பார்வை செய்வதற்காக அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி லெப். கேணல் ஜேம்ஸ் எல். கம்பஹலின் தலைமையிலான குழு ஒன்று வெள்ளியன்று இலங்கை வந்துள்ளது.

இந்த கூட்டு இராணுவப் பயிற்சியில் இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், மங்கோலியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்த இராணுவப் படை அணிகள் பங்குபற்றவுள்ளன.

இது போன்ற பயிற்சிப் பட்டறைகளின் மூலம் இலங்கை இராணுவப் படையை சர்வதேச ரீதியில் உயர்த்த முடியும். அத்துடன் இலங்கை பாதுகாப்புப் படையில் இணையும் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க முடியுமென சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

# பெரும்பான்மை பலத்தைக்காட்ட ஒப்ரேசன் 113 நடவடிக்கை

(நமது நிருபர்)

ஒபரேசன் 113 என்ற குறியீட்டுப் பேரில் நாடாளுமன்றத்தில் தம்முடைய பெரும்பான்மையைக் காட்ட சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரட்டலில் தீவிரமாகியுள்ளது.

113 அங்கத்தவர்கள் ஆதரவைக் காட்டுவதற்கு, மலையகத்தின் தொழிலாளர் காங்கிரஸ் விதித்த நிபந்தனைகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நிறைவேற்றியதாகவும், அதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இணக்கம் தெரிவித்ததாகவும் தகவல்கள் வெளியான போதும் அந்த முயற்சி தோல்வியடைந்ததாக புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜே.வி.பி முதலில் வைத்திருந்த 35 அமைச்சர்கள் நிபந்தனையைக் கைவிட்ட நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நிபந்தனைக்குச் சந்திரிகா உடன்பட்டுள்ளார்.

சந்திரிகாவின் அமைச்சர் மங்கள சமரவீரவின் தலைமையில் 113 அங்கத்தவர்களுக்கான ஆட்திரட்டல் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. முஸ்லிம் காங்கிரசிலிருந்து விலக்கப்பட்ட ஹு... பைலா உள்ளிட்ட நால்வரை தம்பக்கம் இணைக்க மங்கள சமரவீர தரப்பு முயன்று வருகின்றது.

# ஜப்பானியத்தூதரகக்குழு அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம்

(அக்கரைப்பற்று நிருபர்)

ஜப்பானிய தூதரகத்தின் முதலாவது செயலாளர் கே. இஸாஸ்திகா தலைமையிலான உயர்மட்டக்குழு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டது.

பொத்துவில், பாணமை பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி கேட்டறிந்து கொண்டனர். மீனவர்களை மீன்பிடி இறங்குதுறை நிலையங்களிலும், விவசாயிகளை கமநல சேவை மத்திய நிலையங்களிலும் சந்தித்ததுடன் நேற்றுத்திங்கட்கிழமை திருக்கோயில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய பகுதிகளுக்கும் இன்று செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருது, கல்முனை பகுதிகளுக்கும் சென்று அப்பகுதி மீனவர்கள் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கேட்டறியவுள்ளனர்.

இவ்வுயர் மட்டக்குழுவினருடன் கல்முனை மாவட்டக்கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டொமிங்கோ ஜோர்ஜ், அம்பாறை மாவட்ட விவசாயப் பகுதி உயர் மட்ட அதிகாரி லத்தீப் ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

# அம்பாறைமாவட்டத்தில் சிறுபோகம் வரட்சியால் பாதிப்பு ஏற்படலாம்.

(வி.பி.சிவப்பிரகாசம்).

அம்பாறை மாவட்டத்தில் இந்த வருட சிறு போக நெற்செய்கை 40,417 ஹெக்டயர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாவட்ட விவசாயத் திணைக்கள புள்ளி விபரத்திலிருந்து தெரிய வருகிறது.

பருவமழை சீராக இல்லை, பெரிய நீர்த் தேக்கங்களில் வரட்சியின் காரணமாக தினசரி நீர் மட்டம் குறைந்துகொண்டுவருகின்றது. இதனால் விவசாயிகளுக்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகளை உரிய நேரத்தில் வழங்குவதில்ஒரு கஷ்டமான நிலைஏற்பட்டிருக்கிறது என்று நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

பல வருடங்களாக நெற்செய்கைமேற்கொள்ளப்படாது இருந்துவந்த வயல் நிலங்களில் எல்லாம் இந்த வருடத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. விவசாயத்திற்குத் தேவையான உரம், கிருமிநாசினிகளின் விலை வாசிகளில் மாற்றம் ஏற்படவில்லை. முக்கியமாக யூரியா உரத்தின் விலை குறைப்பு ஏற்படும் என்று அரசாங்கம் தெரிவித்த போதிலும் இந்த மாவட்டத்தில் அது செயற்படவில்லை என்று விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள். இதே நேரத்தில் இந்த மாவட்டத்தில் கிடைக்கக் கூடிய கிடை நாசினிகளில் கலப்படம் இருப்பதினால் எதிர்பார்க்கும் பலன் கிடைப்பதில்லை. என்றும் விவசாயிகள் விவசாய அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பிரதேசத்தில் மின்சாரத் தடை

கல்முனைப் பிராந்திய மின்சாரபொறியியலாளர் பிரிவுக்கு உட்பட்ட சில பிரதேசங்களில் புதிய மின் இணைப்பு நிர்மாண வேலை காரணமாக நேற்றுமுதல் நான்கு நாட்களுக்கு (7.06.2004 -10,06.2004) மின் விநியோகம் தடைப்படும் என கல்முனைப்பிராந்திய மின்சாரப் பொறியியலாளர் எஸ்.மகேந்திரன் தெரிவித்தார்.

பாண்டிருப்பு, மருதமுனை, நீலாவணை, பெரியநீலாவணை திரவந்தியமேடு ஆகிய பிரதேசங்களிலேயே காலை 8.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரை இம் மின் விநியோகத்தடை ஏற்படும். எனவும் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தில் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவு

(எஸ்.சிவராசா)

இலங்கையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சகல உரிமைகளும் சமமாக வழங்கப்பட்ட போதிலும் பெண்கள் பிரதிநிதித்துவத்தில் பெரும்பாகுபாடு காட்டப்படுகிறது.

**-வெட்ரிக் ஈபட் மன்ற பிரதிநிதி-**

கடந்த பொதுத் தேர்தலில் பாராளுமன்ற அங்கத்துவத்தில் பெண்களின் பிரதிநிதித்துவ அளவு மிகக் குறைவாகவே உள்ளது.

இவ்வாறு ''வெட்ரிக் ஈபட்'' மன்ற இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி' கருத்தரங்கொன்றில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் இலங்கையில் பெருந்தோட்டத்துறையைப் பொறுத்தமட்டில் பெண்களின் நிலை இன்றும் மோசமாகவே உள்ளது. பெண்களின் வறுமை காரணமாக தொழிற் சங்க ரீதியாக சமமான பங்களிப்பை மேற்கொள்ள முடியாது உள்ளது.

தோட்டத்தில் வேலை செய்வதுடன் பிள்ளை பராமரிப்பதிலும் பெண்கள் ஈடுபடுவதால் பெண்கள் கூட்டங்கள் போன்றவற்றில் கலந்துகொள்வதில்லை, கலாசார கட்டுப்பாடு காரணமாக பொது விடயங்களிலும் பெண்கள் ஈடுபடுவதில்லை என்றார்.



யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்புக் கல்வி வலயத்தினால் நேற்று கொக்கட்டிச்சோலையில் நடாத்தப்பட்ட இடைவிலகிய மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவது தொடர்பான விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்ட கொக்கட்டிச்சோலை இ.கி.மி. பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம் (படமும், தகவலும் எஸ்.புவராஜ்)




*சென்ற வாரத் தொடர்ச்சி....*

ஆனால் இலங்கையிலுள்ள 9887 பாடசாலைகளில் 584 பாடசாலைகள் மட்டுமே இம் முப்பிரிவுகளையும் கொண்ட முழுமையான பாடசாலைகளாகக் காணப்படுகின்றன. 1844பாடசாலைகள் விஞ்ஞானப்பிரிவு தவிர்ந்த கலை,வர்த்தகவியல் பிரிவுகளை மட்டும் கொண்டவை. மற்றுமொரு விடயம் மொத்தப் பாடசாலைகளில் 34.7 சத வீதமானவை (3429) 6-8 தரங்கள் மட்டுமே கொண்ட பாடசாலைகள். இன்று மூடப்பட்டு வரும் பாடசாலைகள் இவை என்றே கூற வேண்டும்.

*ஆசிரியர்கள் நிலைமை.*

2002ம் ஆண்டில் மொத்தப் பாடசாலை, ஆசிரியர்களின் தொகை 194000 ஆகும். இவர்களில் 26.5 சதமானவர்கள் (51500 பேர்) பட்டதாரிகள் 60.8 வீதம்(118000) பயிற்சி பெற்ற ஆசிரியர்கள். ஆசிரியர் பயிற்சிக்கான பல முயற்சிகளும் ஏற்பாடுகளும் செய்யப்பட்ட பின்னரும் 138000 ஆசிரியர்கள் பயிற்சி பெறாதவர்களாய் மட்டுமன்றி சான்றிதழ் அற்ற பயிற்சி பெறாதவர்களாய் மட்டுமன்றி. வளர்முக நாடுகளிலும் கூட இன்று அனைவரும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களாகவே உள்ளனர். பாடசாலையில் நியமிக்கப்படும் ஆசிரியர்கள் சேவைக்கு முன்னரே பயிற்சி பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும் எனும் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர் சேவைக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் கல்வியியல் கல்லூரிகளில் பயிற்சியை முடித்த பின்னரே முழுமையான ஆசிரியர்களாகப் பணிபுரிய முடியும். சகல ஆசிரியர்களும் ஆங்கிலப் பயிற்சி பெறுவதற்கும் படிப்படியாகப் பட்டதாரி ஆசிரியர்களாகத் தமது தகைமைகளை உயர்த்திக் கொள்ளவும் வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும். என்று தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொண்டர் ஆசிரியர்களையும் சேர்த்து நோக்கும் போது24000 ஆசிரியர்கள் தற்போது எந்த வித கற்பித்தல் பயிற்சியும் அற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றைய பாடசாலைக் கல்வி வினைத்திறன் குறைந்து காணப்படுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம்.

ஆசிரியர் பற்றாக்குறை

2002ம் ஆண்டில் இலங்கையில் கல்விமுறை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை தமிழ் மொழிப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக் குறையாகும். இது 1994ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வரும் பிரச்சினையாகும். இவ்வாண்டில் தமிழ்



மொழி ஆசிரியர்களின் பற்றாக் குறை 10324 என்றும் சிங்கள மொழி பாடசாலைகளில் மிதமிஞ்சிக் காணப்பட்ட ஆசிரியர்களின் தொகை 14132 என்றும் கண்டறியப்பட்டது.

*புதிய கல்வி சீர்திருத்தங்கள்*

2002ம் ஆண்டில் பாடசாலைக் கல்வி நிலையில் ஆங்கில மொழியை க.பொ.த. உயர்தர விஞ்ஞானப் பாடங்களுக்குப் பயிற்று மொழியாக அறிமுகம் செய்தல். தகவல் தொழில்நுட்பத் திறன்களை மாணவர்களுக்கு வழங்குதல், க.பொ.த.உயர்தர வகுப்புக்களில் ஆங்கிலத்தை ஒரு பாடமாக கற்பித்தல் வகுப்பறைக் கல்வியோடு மாணவர்கள் சுயமாகத் தேடிச் சென்று செயற்திட்டங்களைத் தயாரித்தல் போன்ற சீர்திருத்தங்கள் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டன 21ம் நூற்றாண்டின் சவால்கள் தேவைகள் நிலைமைகள் என்பவற்றை இளைஞர் சமூகம் எதிர்கொள்ள இவ்வாறான சீர் திருத்தங்களின் தேவை நன்கு உணரப்பட்டுள்ளது.

# இடைவிலகலால் நடைப் பிணமாகும்

# மாணவ சமூகம்

இன்றைய நிலையில் எம் கல்விச் சமூகம் சிக்கித் தவிக்கும் பிரச்சினைகளில் எம் எதிர்கால கல்விச் சமூகத்தினை மிக மோசமாகப் பாதிக்கும் பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருக்கும் பிரச்சினை மாணவர்கள் பாடசாலை வரவின்மை, மாணவர்கள்



பாடசாலையினை விட்டு இடைவிலகல் இவை இரண்டும் இன்று மாணவர்கள் மத்தியில் கூடிக் கொண்டு வருவது ஒரு மனவேதனை தரக்கூடிய ஒன்றாகும்.

இன்று இலங்கையில் இலவசக் கல்வி வரலாறு 50 ஆண்டுகள் ''பொன்விழா''கொண்டாடினாலும் ஐ.நா. சபையின் ''எல்லோருக்கும் கல்வி'' எனும் நிலையினை ஏற்படுத்த முடியாதுள்ளது. இலங்கையில் இலவசக் கல்வியினால் 90 சதவீதமான மாணவர்கள் எழுத்தறிவு உடையோராக காணப்படுவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இதில் 1980ம் ஆண்டு ஆண்களில் 90.5 வீதமானோரும் பெண்களில் 92.4 வீதமானோரும் எழுத வாசிக்கக்கூடியவராக காணப்படுவதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இவ்வீதத்தினை ஏனையவளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் கல்வித்தரத்துடன் ஒப்பிடுகையில் மிகக்கூடுதலான அளவாகக் காணப்படுகிறது. ஆனால் எமது அண்டை நாடான இந்தியாவில் எழுத்தறிவு வீதம் 51 வீதமாகவே காணப்படுகிறது.

எது எவ்வாறாயினும் இலங்கையில் பாடசாலையில் ஒரு பிள்ளையை அனுமதி பெறுவதற்கான வயதெல்லை ஐந்தாகும். ஐந்து வயதாகக் காணப்பட்டாலே அப் பிள்ளை பாடசாலையில் இணைப்பதற்கான உரிமை உண்டு. இவ்வாறு உரிமைகள் வழங்கப்பட்ட போதிலும் எல்லாப்பிள்ளைகளும் பாடசாலைக் கல்வியினை தொடர்வதில்லை எனவும் பாடசாலைக் கல்வியினை தொடர்ந்த பிள்ளை இடைவிலகல் மூலம் பாடசாலைக்கும் தனக்கும் உள்ள உறவை முறித்துக் கொள்வது பற்றியும் பாடசாலைக்கு ஒழுங்கான வரவு இன்மை பற்றியும் எம் மாணவர்கள் மத்தியில் புரையோடிப்போன பிரச்சினையாக திகழ்கின்றது.

இவ்வாறு ஒரு பிள்ளையின் கட்டாய உரிமைகளில் ஒன்றான கல்வி கிடைக்காமல் போவதற்கு எம் சமூக மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் பல பாரிய பிரச்சினைகள் இதற்கு முட்டுக் கட்டையாகவும் தடைக் கற்களாகவும் காணப்படுகின்றன. இவ்வாறு மாணவ சமூகத்தை நடைப்பிணமாக்கும் இடைவிலகல் ஐந்து வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்டவர்களில் 14 சதவீதமான பிள்ளைகள் பாடசாலைக் கல்வியினை தொடராமல் இடைவிலகுவதாகவும் தரவுகளினூடாக அறியலாம். இவ்வாறு தொடரும் இடைவிலகலுக்கு பல முக்கிய காரணங்கள் காரண கர்த்தாக்களாக அமைகின்றது. இவற்றில் பெற்றோர்களின் கவனமின்மை, அறியாமை, பொருளாதார கஷ்டம், இளமைத் திருமணம், குடும்பச்சுமை, பாடசாலைச்சூழல் கற்பிக்கும் ஆசிரியர்களின் வெறுப்பு, தகாத நட்பு, போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதில் மாணவர்கள் இடைவிலகலுக்கு முக்கிய காரணம் பெற்றோர்களே ஏனெனில் சில கிராமப்புறங்களில் வாழும் பெற்றோர்களுக்குக் கல்வி சம்மந்தமான அறிவு இன்மையால் பிள்ளையினை பாடசாலைக்கு அனுப்பாமல் தமக்கு வேலை செய்வதற்கென வைத்துக் கொள்கிறார்கள். சில பெற்றோர்கள் மூத்த பிள்ளை பெண் பிள்ளையாயின் வீட்டில் உள்ள மற்றப் பிள்ளைகளினை கவனிப்பதற்கென ஆயாவாகவும் பயன்படுத்துகிறார்கள்.

அடுத்து ஒரு குடும்பத்தினுடைய கஷ்ட நிலையின் காரணமாக எம் தமிழீழ தேசத்தில் பல பிள்ளைச் செல்வங்கள் அரும் பேறான கல்வியினை தொடராமல் கூலி வேலைக்கும் போகின்றார்கள்.

அடுத்து இளமைத் திருமணம் சமூகத்தில் பாரிய அளவு இல்லையாயினும் இடைவிலகலுக்கு ஒருவகை காரணமாகஅமைகிறது. ஒரு பெண்பிள்ளை பருவம் அடைந்து விட்டால் அவளுக்குத் திருமணம் பேசி ஓரம் கட்டுகின்ற நிகழ்வின் மூலம் ஒரு பிள்ளை கட்டாய இடைவிலகலுக்கு உட்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

மற்றும் இடைவிலகலுக்கு இட்டுச் செல்லும் காரணிகளுள் பாடசாலைச் சூழல், பாடசாலை ஆசிரியர்களும் கணிசமான அளவு பங்கேற்றுக் கொள்கின்றனர். ஏனெனில் ஒரு பிள்ளைக்கு முதலில் கல்விகற்க ஆர்வம் ஏற்படவேண்டுமாயின் பிள்ளைக்கு ஆசிரியரில் ஒரு விருப்பு ஏற்படவேண்டும். அவ்வாசிரியர் ஜனநாயகத் தன்மை கொண்டவராயும், ஆசிரிய நிலையில் இருந்து மட்டும் முடிவு எடுப்பவராயும் இருக்கக்கூடாது பிள்ளையின் கருத்துக்களுக்கும் மதிப்பளிப்பவராகவும் பிள்ளையின் உடலை, உளத்தைப்



பாதிக்கவல்ல தண்டனை தருபவராகவும் இருக்கக்கூடாது இன்று சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்கள் விடும் சில தவறுகளைக் கூட பெரிதாக அம்பலப்படுத்தி மிரட்டல் விடும் வில்லர்களாக மாறிக் கொண்டு இருக்கின்றார்கள். இதற்கான காரணம் பழமைவாதிகள் அந்த மாணவன் தன்னைக் கண்டால் எழுந்து நிற்க வேண்டும், கைகட்டி நிற்க வேண்டும், தன்னை எதிர்த்துப் பேசக்கூடாது எனும் உளவியல் பிரச்சினையாகும். இவ்வாறு மாணவர்களை அடக்கி ஒடுக்கி திணித்து கற்றலை ஏற்படுத்த முடியாது. அது புறக்கூடை நீர் ஊற்றலுக்கு சமனாகும்.

ஓர் மாணவன் பிழை விடுகின்றான். என்றால் அவனை திருத்தப் பார்க்க வேண்டும் அதை விடுத்து அவன் ஆசிரியர்களுக்கு எதிராக கோசம் இடும் தீவிரவாதியாக மாற்ற ஆசிரியர் முனையக் கூடாது.

மாணவர்ளைப் பொறுத்த வரையில் சுதந்திரம் தேவை, புதிய அனுபவங்களை விரும்புவர் உளவியல் தேவைகள் தேவை ஆனால் இவைகளை நாம் மூடி மறைத்து அடக்கி ஒடுக்கி ஒழுக்கம் ஒழுக்கம் என்று ஒழுக்கத்தையும் பிள்ளையின் ஆளுமையினையும் சிதைக்கின்றோம். அது ஒழுக்கம் கடைப்பிடிக்கும் வழியல்ல. ஆசிரியர்கள் முன்மாதிரிகள் ஆசிரியர் மதுபானம் அருந்தி விட்டு பிள்ளையினை அதை அருந்தக்கூடாது ,தொடக்கூடாது என்பதில் என்ன நியாயம்?

பாடசாலையில் ஒற்றுமையுடன் சண்டையில்லாமல் வாழ வேண்டும் என கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களே பல பிரிவுகளாக பல கோணங்களில் ஒற்றுமை இன்றி இருக்கின்றனர்.

மற்றும், மற்றவர்களில் குறை காணுதல், கோள் கதைத்தல், சண்டை பிடித்தல், பொறாமைப்படல், அசட்டுத் தன்மை போன்ற தன்மைகளுடன் பாடசாலையினை நிரப்பிக் கொண்டு வாழ்கின்றார்கள்.

இன்றைய நிலையின் படி ஒரு ஆசிரியர் ஒரு மாணவனுக்கு எதையும் கற்பிக்க முடியாது. பிள்ளை கற்றலுக்கான வழியை மட்டுமே காட்டலாம். என கல்வியியலாளர்களால் கூறப்படுகிறது. ஒரு ஆசிரியர் மாணவர்களிற்கு ஒழுக்கக் கல்வியுடன் சேர்த்து ஆளுமைக் கல்வியினையும் பிரச்சினை தீர்த்தல் கல்வியினையும் தீர்க்கும் வகையில் தனது கற்றல் கற்பித்தல் செயல் ஒழுங்கை நடாத்திச் செல்ல வேண்டும். இதன்மூலம் மாணவர் விரும்பும் ஆசானாகவும் மாணவர்கள் போற்றும் குரு வாகவும் அமைந்து மாணவர்கள் கல்வி கற்கும் திறனை விருத்தி செய்யலாம். அத்தோடு இடைவிலகலையும் தடுக்கலாம்.

ஆகவே எமது கல்விச் சமூகத்திற்கு பாதிப்பினை ஏற்படுத்த வல்ல இடைவிலகல் தடுக்கப்பட வேண்டுமானால் பெற்றோர் மனதில் பிள்ளையினை கற்பிக்க வேண்டும் எனும் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். ஆசிரியர் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். சமூக அமைப்புக்கள், சங்கங்கள், இடைவிலகிய மாணவர்களை இணைக்க முன்வரவேண்டும். எல்லா வற்றிலும் விட சமூக மட்டத்தில் யாவருக்கும் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். இவையாவும் நிறைவேற்றப்படுமாயின் இடைவிலகலைக் குறைக்க வழிகோலலாம்.

**வே. துர்க்கா, புதுக்குடியிருப்பு**

*ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) பத்திரிகையில் செவ்வாய் கிழமை தோறும் கல்விக் களம் எனும் பகுதியினை ஆரம்பித்துள்ளோம். எனவே இப்பகுதியில் தமிழீழத்திலுள்ள கல்வியாளர்களிடம் இருந்து கல்விச் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், அப்பிரச்சினைகளால் ஏற்படும் பாதிப்பு, தீர்க்கும் வழிகள் பற்றிய உங்கள் ஆக்கங்களாக அமையப்பெற்ற ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். மற்றும் மாணவ சமூகத்திடம் இருந்து மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தடைகள், சார்ந்தும் உங்களிடம் காணப்படும் பிரச்சனைகளையும் எதிர்பார்க்கின்றோம். மேலும் தமிழர் தாயக பிரதேச மாணவ மணிகளிடம் உள்ள திறமைகளையும், திறன்களையும் வெளிக்கொணர மாணவர்களே நீங்கள் பாடசாலை ரீதியாக அல்லது ஏனைய ஏதாவது மாவட்ட, மாகாண, தேசிய, போட்டிகளில் கலந்து கொண்டிருப்பின் அதன் வெற்றியீட்டிய புகைப்படங்களை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.*


*ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)*
*கல்விக் களம்*
*பிரதான வீதி*
*கொக்கட்டிச்சோலை*

# முன்னாள் ஜனாதிபதி றீகனின் மறைவு

## அமெரிக்காவிற்கு சோகமான நாள்.

(ராய்டர்)

றொனால்டு றீகனின் மறை



வு அமெரிக்காவுக்குசோகமான நாள் என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியும் பிரபல கெலிவூட் நடிகருமான றொனால்டு றீகன் நேற்று அதிகாலை மரணமடைந்தார். அவரதுமறைவுகுறித்து ஐரோப்பாவில் அரசுமுறை சுற்றுப்பயணம் செய்து வரும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. தற்போது பிரான்சில் சுற்றுப்பயணம் செய்து வரும் புஷ் பிரான்சு நாட்டு அதிபருடன் கூடிவிருந்து அருந்தினார். அப்போது வெள்ளை மாளிகையின் பொதுச் செயலாளர் ஆண்ட்ரு கார்டு மூலம் அவருக்கு இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது.

றீகனின் மரணச் செய்தி

### புஷ் அனுதாபம்

யைக் கேட்டதும் இது அமெரிக்காவுக்குச் சோகமான நாள் என்று அதிபர் புஷ் வேதனையுடன் குறிப்பிட்டதாக வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் க்ளேர்பச்சான் தெரிவித்துள்ளார். பிரான்சு அதிபர் சிராக்குடன் புஷ் அங்குள்ள எலிசஸ் அதிபர் மாளி கைக்குச் சென்றபோது ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைவிட 25 நிமிடங்கள் அமெரிக்க தூதரக அலுவலகத்திற்கு அவர் வந்த பிறகே றீகனின் மரணம் அவருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் அவரைப் பின் தொடர்ந்து வந்த பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த வியாழக்கிழமையிலிருந்து அதிபர் புஷ் ஐரோப்பாவிலிருந்து சுற்றுப் பயணம் செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கிய தலைநகரில் குண்டு வெடிப்பு

## பதினான்கு பேர் உடல் சிதறிப் பலி!

(ராய்டர்)

ஈராக்கிய தலைநகர் பக்தா த்தில் நடந்த குண்டுத் தாக்குதலில் 2 போலந்து ஆட்களும், 2 அமெரிக்கர்களும் கொல்லப்பட்டுள்ளனர். முன்னர் கார்க்குண்டு வெடித்ததில் 10 பேர் கொல்லப்பட்டார்கள். பலர் காயமடைந்தார்கள் அங்கே இறந்தவர்களில் பலர் பொது ப்பாதுகாப்புச் சேவையினர் என மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள். சனியன்று தெற்கு பக்தாத் பொலிஸ் நிலையம் மீது நடை பெற்ற பிறிதொரு சம்பவத்திலே குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டார்கள்.



# இந்தியாவில் ஆட்சி மாறினாலும்

## அமைதிப் பேச்சில் தடையில்லை

(ராய்டர்)

இந்தியாவில் ஆட்சி மாறினாலும் பாகிஸ்தானுடன் நடக்கும் அமைதிப் பேச்சுவார்த்தையில் எவ்வித தடையுமில்லை அது முன்னேற்றப்பாதையில் செல்கிறது. என்று பாக். பிரதமர் ஜமாலி கூறியுள்ளார். நேற்று முன்தினம் பாகிஸ்தானிலுள்ள தொலைக்காட்சியில் பேசிய பிரதமர் ஜபருல்லாகான் ஜமாலி ''இந்தியாவில் காங்கிரஸ் கூட் டணி அரசு அமைத்துள்ளது. தற்போது ஆட்சி மாறினாலும் அமைதிப் பேச்சுவார்த்தையில் எவ்வித தடையுமில்லை. பேச்சுவார்த்தை முன்னேற்றத்தை நோக்கியே போய்க்கொண்டிருக்கிறது.

அண்டை நாடுகளான இந்தியா, சீனா, ஆகியநாடுகளுடன் உறவு பலப்படுவதையே பாகிஸ்தான் விரும்புகிறது. நாம்முன்னேற்றத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம். நமது அணுகுமுறையும் சரியான பாதையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. சீனா, இந்தியாவுடன் கூட்டு அணு ஆயுதக்கொள்கை வைத்துக்கொள்ள பரிசீலித்துவருகிறோம்.'' என்றார்

# ஹொங்கோ குடியரசில் இரு

## குழுக்களுக்கிடையே மோதல் தொடர்கிறது

(ராய்டர்)

ஹொங்கோ ஜனநாயகக் குடியரசில் இடம் பெற்றுவரும் மோதல் சம்பவங்கள் வேறு நகரிற்கும் பரவியுள்ளதாக ஐ.நா. நாடுகளுக்கான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒலிகாலே எனும் நகரிலுள்ள உள்ளூர் ஆயுததாரிகள் குழுவிற்கும் போராளிகள் குழுவிற்கும் இடையே மோதல்கள் மூண்டிருப்பதாகவும் ஐ.நா. நாடுகளுக்கான அதிகாரி யொருவர் கூறியுள்ளார். அரசபடை களிலிருந்து பிரிந்து சென்று தனியாக இயங்கும் தளபதி ஜெனரல் றோறல் இன்கும் றாவின் படையினர் ஹொங்கோவின் கிழக்குப் பகுதி நகரமான புக்காவேவை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தனர். பின்னர் அந்த நகரிலிருந்து ஒரிவேயை நோக்கி படையணி நகர்த்தப்பட்டதாக வெளியான செய்திகளில் எந்த விதமான உண்மைகளும் இல்லையென தெரிவித்த தளபதி தமது கட்டளையின் கீழுள்ள படைகள் புக்காவே பகுதியில் தமது படையணி முகாம்களுக்கு மட்டுமே சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



# பாகிஸ்தானில் அல்கொய்தா

## தீவிரவாதிகள் கைது!

(ராய்டர்)

அல்கொய்தா இயக்கத்துடன் தொடர்புடைய வெளிநாட்டுத் தீவிரவாதியை பாகிஸ்தான் படையினர் கைது செய்துள்ளனர். ஆப்கானிஸ்தான் எல்லையை அடுத்த பழங்குடியினர் வாழும் வடமேற்கு மலைப்பகுதியில் கைது செய்யப்பட்ட இத்தீவிரவாதிகள் ஒரு வெளிநாட்ட வரென்றும் வெள்ளிக்கிழமை அவரைக்கைது செய்ததாக வும் பாகிஸ்தான் ராணுவ செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் சௌகத் சுல்தான் செய்தியாளர்களுக்குத் தெரிவித்துள்ளார். 24வயது நிரம்பிய இந்தத்தீவிரவாதி அபித் அயாஸ் என்று அவனுடைய பெயரைக் குறிப்பிட்டபோது அவனை ஒரு பாகிஸ்தான் முஸ்லிம் என்று முதலில் நினைத்ததாகவும் ஆனால் விசாரணையின் போது அவன் மொஸ்கோவைச் சேர்ந்த ரஸ்யன் என்று தெரியவந்ததாகவும். மற்றொரு பாக். பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.கைது செய்யப்பட்டுள்ள ரஸ்ய தீவிரவாதிக்கு அல்கொய்தா தீவிரவாத இயக்கத்துடன் தொடர்பு இருப்பதாகவும் தெரிய வருகிறது.

# இரண்டாவது உலகப் போரில் உயிர்

## நீத்த வீரர்களுக்கு நினைவஞ்சலி!

(ராய்டர்)

60 ஆண்டுகளுக்கு முன்னர் 2ம் உலகப் போர் காலத்தில் பிரஞ்சு கடற்கரையில் உயிர்மாய்ந்த வீரர்களை நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான முன்னாள் வீரர்கள் நினைவு கூர்ந்தனர். பிரான்சின் பிடியிலிருந்தும், பாஸிசத்தின் பிடியிலிருந்தும் ஐரோப்பா காப்பாற்றப்பட்டதற்கு நேசப்படையைச் சேர்ந்த வீரர்களும் அவர்களை எதிர்த்துப் போர்புரிந்தவர்களில் சிலரும் நோர் மென்டியில் சேர்ந்து நன்றி செலுத்தினார்கள். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள் வதற்காக ஜேர்மனி முதன்முறையாக அழைக்கப்பட்டிருக்கிறது. பல பழைய வீரர்கள் வந்து குவிந்த இந்நிகழ்ச்சியிலே எத்தனையோ ஆண்டு களுக்குப் பிறகு அந்த நாள் தோழர்கள் ஒருவரை யொருவர் ஆண்டு கொண்டார்கள் படைகள் முதலில் வந்திறங்கிய இடங்களில் ஒன்றான அர்மோசே கடற்கரையில் பழம் வீரர்களின் அணிவகுப்பை சர்வதேச நாடுகளின் தலைவர்கள் பாராட்டினார்கள். அங்கு வந்த ஒவ்வொரு நாட்டையும் சேர்ந்த அனைத்து வீரர்களுக்கும் பிரஞ்சு அதிபர் சிரக் அவர்கள் கௌரவப்பட்டம் வழங்கி கௌரவித்தனர்.

# உலக செய்திகள்

# திண்டிவனமருகே லொறி விபத்து

## பத்துப் பேர் பரிதாப மரணம்

(ராய்டர்)

திண்டிவனத்திலிருந்து நேற்று இரவு மரக்காணம் நோக்கி தனியார் பஸ் பயணிகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டது. இந்த பஸ் திண்டிவனத்தையடுத்த பிரம்மதேசம் வரும் போது கட்டுப்பாடிழந்து ஏரிக்கரையில் கவிழ்ந்தது. இந்தவிபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த ஆண்களும்,பெண்களும் படுகாயம் அடைந்தனர்.

அருகில் இருந்தவர்கள் ஓடி வந்து பஸ்ஸில் சிக்கியிருந்தவர்களை வெளியே கொண்டு வந்து காப்பாற்ற முயன்றனர். மருத்துவமனை ஏதும் பக்கத்தில் இல்லாததால் அந்த வழியாக வந்த லொறி ஒன்றை நிறுத்தி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்களை பாண்டிச்சேரி ஜிம்பர் மருத்துவ மனைக்கு அனுப்பிவைத்தனர். காயமடைந்தவர்களை ஏற்றிக்கொண்டு சென்ற லொறி முளசூர் கூட்டுரோடு அருகே வந்த போது எதிர் பாராத விதமாக எதிரே வந்த லொறியின் மீது பயங்கரமாக மோதியது. இதனால் லொறிநிலை குலைந்து சரிந்தது. ஏற்கனவே உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்களில் 10க்கும் மேற்பட்டவர் சம்பவ இடத்திலேயும் மீண்டும் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலும் உயிரிழந்தனர்.





### பாகிஸ்தானில்பேருந்து விபத்து 36பேர் பரிதாபமரணம்

(இஸ்லாமபாத்-7)

பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் 36 பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்துள்ளனர். மலைப்பகுதி நகரான மத்திகாலியில் உள்ள ஆழமான பள்ளத்தாக்கு ஒன்றில் பேருந்து வீழ்ந்ததன் காரணமாக இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. யாத்திரை மேற்கொண்டு சென்றவர்களே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர். பள்ளத்தாக்கில் வீழ்ந்தவர்களை மீட்கும் நடவடிக்கையில் பொலிசாரும், இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர்.


## விளம்பர முகவர்களாக இதோ அரிய சந்தர்ப்பம்

தற்போது வாசகர்களிடத்தில் மிகுந்த வரவேற்பை பெற்றிருக்கும் ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) பத்திரிகையின் பிரதேச விளம்பர முகவர்களாக இணைந்து கொள்ள விருப்புகிறீர்களா?

அப்படியானால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

- அக்கரைப்பற்று.
- கல்முனை.
- களுவாஞ்சிகுடி.
- மட்டக்களப்பு.
- செங்கலடி.
- வாழைச்சேனை.

ஆகிய இடங்களுக்கு எமது முகவர்கள் நியமிக்கப்படவுள்ளனர். நீங்கள் திரட்டும் விளம்பரங்களுக்கு தரகுப் பணம் வழங்குவதுடன் விசேட சலுகைகளும் கிடைக்கும். ஆர்வமுடையவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம்
ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:-065-2226110, 065-2226303




# ஆஸிக்கு சமவலுவில் இந்திய அணி உள்ளது

## துடுப்பாட்டத்தில் மாற்றமில்லை என்கிறார் சேவாக்

(நமது நிருபர்)

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு சமநிலையில் இந்திய அணி இருப்பதாகவும் எதிர்வரும் டெஸ்ட்தொடரில் ஆஸ்திரேலிய அணியை இந்தியா வீழ்த்தும் என்றும் இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டவீரரான வீரேந்திர ஷேவாக் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் அவுஸ்திரேலிய அணி முன்னணி அணியாக இருந்தாலும் ஆஸ்திரேலியாவுக்கு சமமான நிலையில் இந்தியா இருப்பதாக பேட்டி ஒன்றில் ஷேவாக் கூறியுள்ளார். மேலும் கடந்த வருடம் இந்திய அணி ஆஸ்திரேலியா சென்றிருந்த போது ஆஸி. அணியில் மெக்ராத், வார்னே இருவரும் இடம்பெறவில்லை. இந்த இருவரும் தற்போது ஆஸ்திரேலியா அணியில் இடம் பெற்றுள்ள நிலையில் அந்த அணியின் பந்துவீச்சுக் குழு வலிமைமிக்கதாக இருந்தாலும் அதைச் சமாளிக்கக்கூடிய திறமையுடன் இந்திய அணியின் வீரர்கள் இருப்பதாகவும் ஷேவாக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஷேவாக் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது. நிச்சயமாக அவர்களுடன் (ஆஸ்திரேலியா)சமநிலையில் நாம் இருக்கிறோம். அவர்களுடைய சொந்த மண்ணில் அவர்களை வீழ்த்தும் வலிமை நம்மிடம் இருக்கிறது. என்றால் அவர்களுக்கு சமநிலையில் நாம் இருப்பது உறுதியே. ஆஸ்திரேலியா போன்ற அணியை வீழ்த்தவேண்டும். எனின் 5 நாட்களும் கடுமையாக போராட வேண்டும்.

அதைத்தான் அடிலெயட்டில் நடைபெற்ற டெஸ்டில் செய்து முடித் தோம். அவர்கள் வரும் அக்டோபர் மாதம் இந்தியா வரும் போது இதே போன்றதொரு கடும்




போட்டியை கொடுப்போம் என்று கூறிய ஷேவாக் டெஸ்ட் கிரிக்கெட்டில் முற் சதம் அடித்த ஒரே இந்திய வீரர் ஆவார். பாகிஸ்தானுக்கு எதிரான தொடரின்போது முல்டானில் நடைபெற்ற டெஸ்டில் ஷேவாக் 309 ஓட்டங்களை எடுத்தது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடருக்கு முன்னர் இந்திய அணி சில முக்கிய தொடர்களில் விளையாட உள்ளது. இந்த போட்டிகள் குறித்து ஷேவாக் கூறுகையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடருக்கு முன்னர் ஆசிய கோப்பையில் விளையாட உள்ளோம். அதன்பிறகு ஹாலந்தில் முத்தரப்பு தொடரிலும் இங்கிலாந்தில் சாம்பியன்ஸ் தொடரிலும் விளையாட உள்ளோம்.

எனவே இப்போதே ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் பற்றி பேச நான் விரும்பவில்லை. ஒவ்வொருதொடராக கவனத்தில் எடுத்துக் கொள்ள உள்ளேன். ஆஸ்திரேலிய அணி இந்தியா வரும்போது நான் எப்படிப்பட்ட நிலையில் இருக்கப் போகிறேன் என்பது பற்றி எனக்குத் தெரியாது.

ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சு பற்றி கேட்டால் நாம் அங்கு சென்றபோது இருந்ததைவிட தற்போது மிக வலிமையாகவே ஆஸி.அணி உள்ளது. மெக்ராத், கில்லெஸ்பி, பிரட்லீ, மற்றும் ஷேன்வோர்ண் போன்ற மிகச்சிறந்த பந்து வீச்சாளர்கள் ஆஸ்திரேலிய அணியில் உள்ளனர்.

இப்படிப்பட்ட தரமான பந்து வீச்சுக்குழுவை எதிர்த்து ஓட்டங்களைக்குவிப்பது சாதாரண விஷயம் அல்ல ஆனால் ஆஸ்திரேலிய அணி இந்தியா வரும்போது நம்முடைய துடுப்பாட்ட வீரர்கள் எத்தகைய நிலையில் இருப்பார்கள் என்பதைப் பொறுத்தது அது. எதிரணியின் பந்துவீச்சு எப்படி இருந்தாலும் நம்முடைய அணி வீரர்களின் துடுப்பாட்ட நிலை எப்படி இருக்கிறது. என்பது மிகவும் முக்கியம் என்று கூறினார். ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி தொடர்ந்து தோல்வி களைத் தழுவி வருவது குறித்து பேட்டியில் தெரிவித்த ஷேவாக் கூறுகையில் ஒருநாள் கிரிக்கெட் என்பது மிகவும் கடினமானது. ஒரே நாளில் முடிவை காண வேண்டும். எனவே நம்முடைய விளையாட்டில் எந்த குறைபாடும் இல்லை. ஒரு நாள் போட்டிகளில் எப்போது என்ன நடக்கும் என்ற கவலை இருந்து கொண்டே இருக்கும்.

# வங்கதேச அணிக்கு எதிரான தொடரில் தென்னாபிரிக்கா வலுவான நிலையில்

(நமது நிருபர்)

மேற்கிந்திய அணித்தலைவர் லாரா, துணைத்தலைவர் சர்வான் இருவரது அபார சதத்தின் உதவியுடன் வங்கதேச அணிக்கு எதிரான 2-வது டெஸ்டில் மே.இ. தீவுகள் அணி நல்ல நிலையில் அணி 2-ம் நாள் ஆட்டத்தில் 284 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து முடித்ததால் தொடரை வெல்ல இந்த டெஸ்டில் வெற்றி பெற்றேயாக வேண்டிய நிலையில் முதல் இன்னிங்சை மே.இ தீவுகள் தொடங்கியது.



உள்ளது. இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் 2-வது டெஸ்டின் 2-ம் நாள் ஆட்ட நேர முடிவில் மே.இ.தீவுகள் அணி 3 விக்கெட் இழப்பிற்கு 294 ஓட்டங்களை எடுத்து வலுவான நிலையில் இருந்தது.

முதல் இன்னிங்சில் வங்கதேச அணி 284 ஓட்டங்களை எடுத்தது குறிப்பிடத்தக்கது. முதல் நாள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 264 ஓட்டங்களுடன் இருந்த வங்கதேச

முதல் இன்னிங்சில் லாரா, சர்வான் இருவரும் அபாரமாக விளையாடி சதமடித்தனர். லாரா 119 ஓட்டங்களை எடுத்தார். 108 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள லாராவின் 26-வது சதம் இது வாகும். சர்வான் 106 ஓட்டங்களை எடுத்து 2ம் நாள் முடிவில் ஆட்டமிழக்காமல் இருந்தார். இது அவரது 5-வது டெஸ்ட் சதமாகும். லாரா 12 பவுண்டரிகளையும், 3 சிக்சர்களையும் அடித்தார்.

# சம்மாந்துறை பாடசாலைகளில் அதிபர்களாக ஆசிரியர்கள் கடமையில்

சம்மாந்துறை கல்வி வலயத்திலுள்ள பல பாடசாலைகளின் பொறுப்பு அதிபர்களாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால், இப்பாடசாலைகளின் கல்விச்செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

குறிப்பாக, நாவிதன்வெளி கல்விக்கோட்டத்திலுள்ள 1 ஏ.பி பாடசாலையான நாவிதன்வெளி - அன்னமலை மகாவித்தியாலயம், 1சீ பாடசாலையான 15ம் கிராம திருவாளூர் விவேகானந்த மகாவித்தியாலயம், மற்றும் 07ம் கிராம அரசினர், தமிழ்கலவன் பாடசாலை உள்ளிட்டபல பாடசாலைகளில் அதிபர்கள் இன்றி ஆசிரியர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை தகுதியும் திறமையும், சேவைஅனுபவமும் கொண்ட இலங்கை அதிபர் சேவையின் தரம்-1, தரம்-2-1ஐஉடைய அதிபர்கள் இக்கோட்டப்பாடசாலைகளில் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்றனர்.

கடந்த கால போர்ச் சூழல் காரணமாகவும், வேறுபல காரணங்களாலும் கல்வி நிலையம் மிகவும் புறக்கணிப்புக்களுக்கு உட்பட்ட இப்பாடசாலைகளுக்கு-சிறந்த நிருவாக கட்டமைப்பை ஏற்படுத்தும் வகையில், இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களை அதிபர்களாக நியமிக்கவேண்டுமென பெற்றோர்கள் ஆதங்கப்படுகின்றனர்.

மனித வாழ்வுக்கு அடித்தளமாக அமையக்கூடிய கல்விவாய்ப்பை எமது மாணவ சமூகம் இழந்து விடாவண்ணம், பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம் பெறவேண்டும்.

எனவே, சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளரும், வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரும் இதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பிரதேச பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

**வி.கே.சுந்தரன்**

# எங்கள் குரல்

## மட்டு நகரில் இப்படியும் சில இளைஞர்கள்

மட்டக்களப்பு நகரின் மத்திய மணிக்கூட்டு கோபுரத்தின் அருகில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவில் சில பாடசாலை மாணவர்களும், சில இளைஞர்களும் விடுமுறை நாட்களில் மதுபானம் அருந்துவதுடன் வீதியால் செல்லும் யுவதிகளையும் மாணவிகளையும் கிண்டல் செய்துக் கொண்டு தொல்லை படுத்துகிறார்கள். அத்துடன் மாலை நேரத்தில் அருகாமையில் இருக்கின்ற தனியார் பேருந்து ஆசனம் பதிவு செய்யும் இடத்திற்கு முன்பாகவும் இவர்களது சேட்டை தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது.

இந்தப் பூங்கா இராணுவ பொலிஸ் சோதனைச் சாவடிகளை அண்டியதாகவும், மாநகர சபைக்கு த்சொந்தமாகவும் உள்ளது. அத்துடன் நகரின் மத்தியிலும் அமைந்துள்ள இப்பூங்காவில் நடக்கின்ற இச்சம்பவத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கண்ணன்**
**மட்டக்களப்பு**

# நடைபாதையை வியாபார தலமாக்காதீர்கள்!

போக்குவரத்து நெரிசல் மிக்க கல்முனை நகர தனியார் பஸ் நிலையத்துக்கு முன்பாகவும், கல்முனை மாநகர நினைவுத் தூபிக்கும் அருகாமையிலும் வியாபாரிகளினால் மேற்கொள்ளப்படும்பழ வியாபாரத்தினால் கல்முனை மட்ட க்களப்பு பிரதான வீதியினால் போ க்குவரத்து செய்யும் வாகனாதிகள் குறித்த எல்லைக்குள் பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதை அவதானிக்க முடிகிறது.

நடைபாதைகளில் பெருமளவு குவித்து வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் அன்னாசி, மங்குஸ்தான், ரம்புட்டான் ஆகிய பழங்களை வாங்குவதற்குகூடி நிற்கும் பொதுமக்களின் நெரிசல் சில நேரங்களில் வாகன மோதல்களையும் ஏற்படுத்தி விடும் என பலராலும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. இதனை கவனத்தில் கொண்ட கல்முனை மாநகர ஆணையாளர் சம்பந்தப்பட்ட வியாபாரிகளை இவ்வாறான நெரிசல்மிக்க இடங்களில் இவ்வியாபாரங்களை செய்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் தருவதையும், நகரின் சூழல் சுத்தத்துக்கும் பங்கம் ஏற்படுத்துவதையும் உடனடியாக நிறுத்துமாறும் தவறும் பட்சத்தில் அனுமதியற்ற நடைபாதையில் வியாபாரம் செய்தமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளனர் இனியாவது பொது மக்களின் நன்மை கருதி வியாபாரிகள் கவனத்தில் கொள்வார்களா?

**நலன் விரும்பி**

# தவறான தீர்ப்பினால் மனமுடைந்து போயுள்ள மீராக் கேணி, மக்கள்

ஏறாவூர் பற்று பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள மீராக்கேணி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள அரிசி ஆலைகளால் பொது மக்கள் பல அசௌகரியங்கள் ஏற்படுதலைத் தவிர்க்கும் முகமாக ஏறாவூர் பற்று பிரதேசசபையினால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மீராக்கேணியைச் சேர்ந்த சம்சுதீன் என்பவர் தொடர்ந்து பல வருடகாலமாக இயற்கையாக நீர் வழிந்தோடிய வடிகானை மறித்து உமி ,மண் போன்றவற்றை மூடியதாக மீராக்கேணி, மிச்நகர் ஐயங்கேணி பொது மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வந்தனர். மழை காலங்களில் செல்வதற்கு பாதையின்றி மிகவும் கஷ்டப்பட்டனர். ஏறாவூர் பிரதேசபையினால் கடந்த 2002 ம் ஆண்டு இவ்வடிகான் பாரிய மண் அகலும் இயந்திரம் கொண்டு வெட்டப்பட்டது. மக்கள் செல்வதற்காக பாதையும் போடப்பட்டது இதைவிட்டு மக்கள் மிகவும் சந்தோஷ மடைந்தனர்.

இவ்வடிகான் சட்டத்திற்கு முரணான வகையில் மூடப்பட்டதனால் அதை வெட்டியமையால் ஏற்பட்ட செலவை சம்சுதின் செலுத்த மறுத்ததனாலும் சூழல் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தியமைக்காகவும் இவர்மேல் பிரதேச சபையினால் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட போது சம்சுதீன் அவர்களினால் வழங்கப்பட்ட பொய்க் காரணங்களால் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன.

இதைக் காரணமாகக் கொண்டு பாரிய இயந்திரத்தைக் கொண்டு வெட்டப்பட்ட 36அடி அகலமான வாய்க்கால் மண், உமி போன்றவை போடப்பட்டு மீண்டும் மூடப்பட்டுள்ளது. அதனால் இம்முறை ஐயங்கேணி, மிச்நகர்,மீராக்கேணி மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்படுவதுடன் பல நோய்களும் உண்டாகலாம் என ஐயமுற்றுள்ளதோடு மிகவும் மன முடைந்து காணப்படுகின்றார்கள்.

**நலன் விரும்பி**



### சிந்தனைக்கு

நாம் யாரையும் ஏமாற்றவும் இல்லை, துரோகம் இழைக்கவும் இல்லை ஆனால், எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**

ஈழநாதம்
மக்கள் தினசரி — மட்டக்களப்பு பதிப்பு
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303
batti@eezhanatham.com
08.06.2004

# கொழுந்து விடும் ஜே.வி.பி பேரினவாதம்

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில் சமீப நாட்களாக ஜே.வி.பி கட்சியினர் தெரிவித்துவரும் சமாதானத்துக்கெதிரான அதிருப்தி தரும் தகவல்கள் எதிர்காலத்தில் விடுதலைப்புலிகளும் சிறிலங்கா அரசும் சமாதானம் தொடர்பாக பேசுவதற்கு பலமான முட்டுக்கட்டைகளாக அமையும் என்பதில் வியப்பில்லை.

தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களின் போது மூன்றாம் தரப்பாக இன்னொரு சக்தியின் கருத்துக்கள், அபிப்பிராயங்கள் புகுத்தப்படுமானால் பேச்சுக்களில் மேலும் சிக்கல் நிலையை உருவாக்க வழி சமைக்கும்.

சமீபநாட்களாக அதிருப்தி தரும் கருத்துக்களை தெரிவித்து வரும் ஜே.வி.பி. தற்போது தமது நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திடம் தெரிவிக்கப்போவதாக அறிவித்திருப்பது சமாதானப் பேச்சுக்களை உருவாக்குவதில் மேலும் சிக்கல் நிலையை அல்லது தடங்கல்களை ஏற்படுத்தும் என்ற ஐயப்பாடு தமிழர்தரப்பில் எழுந்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிக்கட்சியான மக்கள்விடுதலை முன்னனி உலக நாடுகளுக்குச் சென்று வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாகசபை தொடர்பான அதிருப்தியினங்களை வெளிப்படுத்துமானால் சமாதானத்தில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை சிதடிக்கும் ஒரு நடவடிக்கையாகவே அமைய இடமுண்டு.

கடந்த இருபது வருட காலப் போர் அவலங்களினால் உயிர் உடமைகளை இழந்து பொருளாதார ரீதியாகவும் பல்வேறு அவலங்களையும் சுமந்து நிற்கும் தமிழினத்தின் பொருளாதாரம் மீளக்கட்டியெழுப்பப்பட வேண்டும். வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை ஏற்பட்டு மனிதாபிமான புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதனை மேற்கொள்ளும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் இடைக்கால சபை யோசனை முன்வைக்கப்பட்டுள்ளன.

இறுதித் தீர்வு குறித்த நகர்வுக்கு முன்னோடியாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை ஏற்படுத்தப்பட்டு அதனூடாக மனிதாபிமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஒரு நம்பிக்கையான சூழல் ஏற்படும் பட்சத்தில் இறுதித் தீர்வு நோக்கி நகர முடியும்.

இவ்வாறான படிமுறைகளுக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் ஜே.வி.பியினர் மேற்கொண்டு வரும் காய் நகர்த்தல்களை முறியடிக்கக்கூடிய மனோபலம் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடமில்லை என்பது உண்மை.

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பலத்தைத் தக்க வைக்கமுடியாது. தள்ளாடப்படும் அரசு அதில் பிரதான பங்காளிக் கட்சியின் கடும் போக்குத் தனத்தை சாந்தப்படுத்துவதா அல்லது விலக்கி ஒதுக்குவதா இந்த இரண்டில் ஒன்றை மட்டும் தான் கையாளமுடியும்.

ஜே.வி.பியினரை திருப்திப்படுத்த அரசு முனையுமானால் தமிழர் தரப்பு சமாதானப் பேச்சுக்களில் வைத்திருந்த நம்பிக்கை மறைந்து அவநம்பிக்கைத் தனமே ஏற்படும்.

எனவே தமிழ் மக்களின் அபிலாசைகளை கடந்த இருபது வருடகாலப் போர் ஓய்வு நிலையில் ஒரு சமாதான வழி திறக்கப்படுவதற்கு ஜே.வி.பி யினர் குந்தகமாகச் செயற்படக் கூடாது.

# ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்கு அரசியல் ரீதியாக வழிவகை செய்ய வேண்டும்.

## -பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன்-

(ஏ.எல்.எம்.சலீம்)

ஊடகவியாளர்கள் சுதந்திரமாகத் தமது சிந்தனைகளையும், கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அவ்வாறு செயற்படும் சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு,பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு அரசியல் யாப்பு ரீதியாக வழிவகை செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு ஊடகத்துறை பிரதியமைச்சர் எம்.எச்.சேகு இஸ்ஸதீன் கூறினார்.

தினச்சுடர்" அறிமுக விழாவும், தேசிய விருது வழங்கும் வைபவமும் கடந்த ஞாயிற்றுக் கிழமை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தினச்சுடர் பிரதம ஆசிரியர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சிறந்த ஊடகவியலாளர்கள், சிறந்த கவிஞர்கள், இளம் எழுத்தாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் விழாவில் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

ஜனாதிபதியும், ஊடகத் துறை அமைச்சரும், தமிழ் ஊடகத் துறையில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்த்து வைக்க வேண்டுமென என்னைக் கேட்டுக் கொண்டனர்.

நான் ஊடகத்துறையைச் சார்ந்தவன் என்னையும் கவிஞனாகவோ, எழுத்தாளனாகவோ, பேச்சாளனாகவோ, உங்கள் பட்டியலில் ஒரு சிறு மூலையிலாவது சேர்த்துக் கொள்ளுமாறு இச்சந்தர்ப்பத்தில் கோருகின்றேன்.

இந்த ஊடகத்துறையைப் பொறுத்தவரை சொந்தத்தோடும், நேசத்தோடுமே ஊடகத்துறை பிரதியமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டேன்.இந்தஅடிப்படையில் ஊடகத்துறையினரின் நலன்பேணும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நான் முனைந்து செயற்படவுள்ளேன்.

இதே வேளை கடந்த கால யுத்தம் காரணமாகக் கறையான் அரிப்பது போல் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ள தென்கிழக்குப் பிரதேசக் கலைஞர்களைக் கைதூக்கி விடுவதற்கென தென் கிழக்குப் பிரதேசத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சமூக நிலையமொன்றைத் திறப்பதற்கும் நான் உத்தேசித்துள்ளேன்.

ஊடகத்துறையைப் பொறுத்த வரை இன்று அரச துறை ஊடகங்களென்றும், தனியார் துறை ஊடகங்களென்றும் இயங்கி வருகின்றது.

இவை இரண்டிற்கும் வேறு வேறு எஜமானர்களிருக்கின்றனர். ஏதோ ஒரு வகையில் இந்த எஜமானர்களுக்குக் கட்டுப்பட்டே ஊடகவியலாளர்கள் செயற்பட வேண்டியுள்ளது.

எனினும் இந்தக் கட்டுப்பாடுகள் வரம்புகளை மீறி ஊடகவியலாளர் சுதந்திரமாகச் செயற்பட வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

இந்த வகையில் பத்திரிகா தர்மம் பேணி நீதி நேர்மையுடன் சுதந்திரமாக செயற்படும் ஊடகவியலாளர்களுக்குப்பாதுகாப்பளிக்க வேண்டும்.

இந்தப் பாதுகாப்பு விடயம் தொடர்பில், அரசியலமைப்பில் பரிபூரணமான இடம் கொடுக்கப்பட வேண்டும். நாம் இன்று அரசில் இருந்து கொண்டு, அரசின் பிரதியமைச்சராக இருந்து கொண்டு, அரசுக்குப் புகழ் பாடவோ, வக்காலத்து வாங்கவோ யோசிக்கவில்லை. இன்று எனது சிந்தனை அரச துறை ஊடகங்கள், சுதந்திர ஊடகத்துறையாக மாற்றப்பட வேண்டுமென்பதேயாகும்.

எனவே அரச ஊடகத்துறை மட்டுமன்றி ஏனைய ஊடகத்துறை ஊடகவியலாளர்களும் அடுத்த அரசியல் எது, அடுத்த அரசு எது என்பது பற்றி சிந்திப்பவர்களாக இருக்கக்கூடாது. ஊடகவியாலாளர்கள் எழுத்துக்கு விசுவாசமான புனித பணியிலிருந்து செயல்படுபவர்கள்

இந்த நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கும் அத்தனை அடிப்படை உரிமைகளும், மனித உரிமைகளும், ஊடகவியலாளர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்கள் தமது கைகளை எந்த விலங்குகளுக்கும், எந்தப் பூட்டுக்களுக்கும் விட்டுக் கொடுக்கத் தேவையில்லை.

எந்த அரசை உருவாக்குவது என்பதல்ல ஊடகவியலாளர்களின் பிரச்சினை.

ஊடகவியலாளர்கள் புனிதமானவர்கள், கருத்துச் சிந்தனையை வளர்ப்பவர்கள் என்ற அடிப்படையில் மனித நேயத்தினடிப்படையிலான அடுத்த சந்ததியை எவ்வாறு உருவாக்கலாமென்ற சிந்தனையிலும், செயற்பாட்டிலுமே ஊடகவியலாளர்களிருக்க வேண்டும்.

இந்த வகையில் எந்த விதமான சட்டப் பாதுகாப்புக்கள் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமோ, அவற்றை வழங்க நாம் என்ன செய்ய வேண்டுமென்பதற்குப் பொதுமக்கள் சிபார்சுகள் தரப்பட வேண்டும்.

இத்தகைய சிபார்சுகள், பிரேரணைகள் எமக்குத் தரப்பட்டால் ஊடகவியலாளர்களுடன் தோளோடு தோள் நின்று போராடி அவற்றை நிறைவேற்றித் தர சித்தமாயுள்ளேன்.

மேலும் நான் அடிப்படையில் அரசியல் வாதியல்ல. ''மனித நேயன்'' இந்த அடிப்படையில் தேசிய சமூகப் பிரச்சினைக்கு என்ன வகையானதீர்வுகாண வேண்டுமென்பதில் மிகவும் முனைப்பாக இருக்கின்றோம்.

நாம் எந்த அரசில் ஒட்டிக் கொண்டிருந்தாலும் தமிழ் பேசும் சமூகங்களுக்கு சம அந்தஸ்தும் சம உரிமையும் வழங்கப்பட்டவர்களாக வாழ வேண்டுமென்பதற்காக இடைவிடாது போராடுவோம்.

எமக்கிடையில் எந்தப் பதவிகளும், எந்த ஆயுதங்களும் குறுக்கிடப் போவதில்லை நிரந்தர சமாதானத்தை இந்த நாட்டில் கட்டியெழுப்புவதற்கு எல்லோரும் முன்வரவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மீன்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்

(வி.பி.சிவப்பிரகாசம்)

நன்னீர் நிலையில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மீன் இனங்களை வளர்ப்பதிலும் போதுமான கவனம் செலுத்த வேண்டும். இன்று அதிகமான மீனினங்கள் அழிந்துள்ளது. மீனவர்கள் சிறிய கண்கள் உள்ள வலைகளைப் பாவிப்பதினால் மீன்கள் வளர்ச்சியடைவதற்கு முன்பே குஞ்சுகள் அழிந்து கொண்டு வரும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இவற்றை முழுமையாக கட்டுப்படுத்தி மீன் வளர்ச்சியடைவதற்கும் நீங்கள் செயற்படவேண்டும்.எமது பிரதேசங்களிலுள்ள களப்புகளில் நண்டு, இறால் வளர்ப்பதிலும் குளங்களில் மீன் இனங்களை வளர்ப்பதிலும் கவனம் செலுத்தி வரவேண்டும்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை அக்கரைப்பற்று கோளாவில் விநாயகர் வித்தியாலய வளாகத்தில் ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள நன்னீர் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மீன்பிடி வள்ளங்கள் வழங்கும் வைபவத்தில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் எஸ்.அருள்ராஜா பேசுகையில் சொன்னார்.

எமது பிரதேசத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன்பிடித் தொழில் இருக்கிறது. மீனவர்கள் மீன்பிடியில் காட்டும் ஆர்வத்தோடு மீன் இனங்களை பாதுகாத்து வளர்ப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். இப்பகுதியில் சுமார் 12 இன மீன்கள் அழிந்துள்ளது. இன்னும் அழியும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது.இந்த நிலையைக் கவனிக்கும் பட்சத்தில் எமது எதிர்காலச் சந்ததி மீன் பிடியில் ஈடுபடமுடியாத ஒரு நிலையும் ஏற்படும். நன்னீர் மீன்பிடியை மட்டும் நம்பிக் கொண்டிருக்காது ஆழ்கடல் மீன் பிடியிலும் கவனம் செலுத்த வேண்டும். இதற்குத் தேவையான பயிற்சிகளும், உதவிகளும் வழங்க மீன்பிடித் திணைக்களம் ஆயத்தமாக இருக்கிறது இதனையும் பயன்படுத்திக் கொள்வதற்கு முன் வாருங்கள் என்றார்.



மீள் குடியேற்றங்கள் பற்றி [illegible] பேசப்படும் இந்தக் காலகட்டத்தில் [illegible] மாவட்டத்தில் மீளக்குடியேறியுள்ள குடும்பங்கள் இப்படியான குடிசைகளிலே வாழ்க்கை நடத்திக் கொண்டு வருவது [illegible] அதிகாரிகளின் கண்களில் தெரியவில்லையா? இப்படியான குடிசைகளில் மீளக் குடியேறி வாழ்க்கை நடத்தும் குடும்பங்கள் கோருகிறார்கள். ([illegible])

ஈழநாதம்
Eealanatham

## மட்.மாவட்ட மின்தடை! மக்கள் மத்தியில் விசனம்

(எஸ்.நிலாந்தன்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அடிக்கடி மின்சாரத் தடை காரணமாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இத்திடீர் மின்தடை காரணமாக மாணவர்கள் மற்றும் மின்சாரத்தை பாவனைக்கு பயன்படுத்தி தொழில் புரிவோரும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக மின்சார சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டுகேட்டால் மின்சாரத் திருத்த வேலை காரணமாகவே இவ்வாறு தடைப்படுவதாக தெரிவித்தனர்.

## சூரியனை – வெள்ளி குறுக்கே தாண்டுகிறது

(நமது நிருபர்)

வெள்ளிக்கிரகம் 124 ஆண்டுகளுக்கு பின்பு இன்று சூரி யனைக் கடந்து சுழற்சி செய்யவுள்ளது.

இதுவரை ஐந்து முறைகள் இடம்பெற்றுள்ள இந்த அபூர்வகாட்சி சரியாக மு.ப. பகல் 11.14 முதல் 5.23 வரை இலங்கை யில் காணலாம்.

1639, 1761, 1869, 1774, 1882 ஆகிய ஆண்டுகளில் இது நிகழ்ந்துள்ளது. எதிர்காலத்தில் 2012 ஆண்டு இடம்பெறவுள்ளது. இதனை இலங்கையில் வாழ் மக்கள் பார்க்க முடியாது. இதே வேளை 2101ம் ஆண்டு வரும் நிகழ்வை பார்க்க முடியும்.

இந்த கிரகம் மாறிச் செல்லும் சமயம்சூரியனைப் பார்க்க வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

## தாளங்குடாவில் மோட்டார் சைக்கிள் விபத்து மூவர் படுகாயமடைந்தனர்

(கி. ரகுலக்ஷனா)

மட்டக்களப்பு தாளங்குடாவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒருவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் மற்றைய இருவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஏ.கேதீஸ்வரன் (22), ந. சிவனேந்திரன் (20) ஆகியோரே மட்டக்களப்பு போதனாவைத்தியசாலையிலும் இ. சிவராசா (28) என்பவரே கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## வடக்கு கிழக்கு எல்லே போட்டியில் அம்பாறை முதலாமிடம்

(எஸ்.நிலாந்தன்)

வடக்கு கிழக்கு மாகாண எல்லே போட்டியில் மட்டக்களப்பு மாவட்டம் இரண்டாமிடத்தை பெற்றுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டி தெகியத்தை கண்டியில் நடைபெற்றது.

இப்போட்டியில் வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எட்டு மாவட்டங்கையும் சேர்ந்த வீரர்கள் கலந்து கொண்டனர்.

இதில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்கள் முதலாமிடத்தையும், மட்டக்களப்பு மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட ஏறாவூர் பற்று வீரர்கள் இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

### ஆவனங்கள்...

வந்தாறுமூலையைச் சேர்ந்த இரு இளைஞர்களிடமிருந்தே மேற்படி மோட்டார் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

உரியவர்கள் தகுந்த ஆவனங்களை காட்டி மோட்டார் சைக்கிள்களை எடுத்துச் செல்ல முடியும் எனவும் தவறும் பட்சத்தில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்

கடந்த பத்தாண்டுகளில் ஆண்டுதோறும் சராசரியாக 600.000 பீப்பாய்கள் எண்ணெய் கப்பல் விபத்துக்களின் மூலம் கடலில் சேர்ந்துள்ளது. இது 2002 ஆம் ஆண்டில் ''பிறிஸ்ரிஜ்'' எண்ணெய் தாங்கிக் கப்பல் மூழ்கியதால் கடலில் கலந்து எண்ணெய் அளவைப் போலப் 12 மடங்குகள் ஆகும்.

## சங்காபிஷேகம்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு பாலையடிபால விக்னேஸ்வரா ஆலய மகா சங்காபிஷேகம் எதிர்வரும் 15ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

முன்னதாக 13ஆம் திகதி பால விக்னேஸ்வரப் பெருமானின் முத்துச்சப்பரம் பவனி காரைதீவில் தேர் ஓடும் வீதிவழியாக இடம்பெறும்.

## கல்முனை பரீட்சை மோசடி தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும்

### –அதிபர்கள் சங்கம் கூடித் தீர்மானம்–

(வி.ரி.சகாதேவராஜா)

''கல்முனை கல்வி மாவட்டத்தில் இம்முறை நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையில் இடம்பெற்ற மோசடி தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணையொன்றினை பரீட்சைத் திணைக்களம் உடன்மேற்கொண்டு உண்மை நிலை பற்றி ஊடகங்களூடாக மக்களுக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்''

இவ்வாறு கோரும் தீர்மானத்தை கல்முனை மாவட்ட அதிபர்கள் சங்கம் நிறைவேற்றி பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

கல்முனை, கல்வி மாவட்ட அதிபர்கள் சங்கக் கூட்டம் சனியன்று காலை சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் சங்கத் தலைவர் ஏ.எச்.ஏ. பஷீர் தலைமையில் நடைபெற்றது.

பரீட்சையில் மோசடிகள் இடம்பெற்றதாக செய்திகள் வெளிவந்தன அவற்றின் உண்மைத் தன்மையை வெளியுலகுக்குக் காட்டும் வகையில் அதிபர்கள் சங்கம் இக்கூட்டத்தைக் கூட்டியுள்ளது.

அங்கு பத்திரிகைகளில் வெளியான செய்திகள் வாசித்துக் காட்டப்பட்டன.

அதன்படி பௌதீகவியல், வணிகவியல் பாடவினாத்தாள் சில காணாமற் போனது பற்றியும், ஒரு வினாத்தாள் மறு நிலையத்தில் இருந்தமை பற்றியும் கூறப்பட்டது.

மாணவர்களை பூரணமாகச் சோதனையிட மேற்பார்வை குழுவுக்குக் உரிமை கிடையாது. இனிமேல் அதற்கொருவர் நியமிப்பின் இச் செயற்பாட்டைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

பரீட்சைக் காலத்தில் பரீட்சைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கல்முனையில் உபஅலுவலகமொன்றினைத் திறந்து நேரடி மேற்பார்வையைச் செய்ய வேண்டும்.

பரீட்சைக்குரிய இணைப்பாளர்கள் உதவி இணைப்பாளர்கள் மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குனர்களின் பட்டியலை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் பெற்று பரீட்சை மண்டபங்களில் வழங்குகின்ற பொறுப்பினை பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டால் இடமாற்றக் கூடாது.

கிராமத்தில் இயன்றவரை ஓரிரு பரீட்சை நிலையங்களை மாத்திரமே நிறுவினால் ஏனைய பாடசாலை சீராக இயங்கும் போன்ற தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

### ஜனாதிபதியின்...

இழப்புக்களையும், அழிவுகளையும் சந்தித்த தமிழ் மக்கள் சமாதான வழியில் தீர்வு கிட்டும் என்ற தமது நம்பிக்கை மங்கிவருவதாக உணர்கின்றனர்.

போர்நிறுத்தமும், புரிந்துணர்வு உடன்பாடும் எட்டப்பட்டு 28 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் தமிழர் தாயகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்பட்டு மீண்டும் ஒரு போரை சிறிலங்கா அரசு தமிழ் மக்கள்மீது தொடரவிருப்பது போல் தெரிகிறது. இதனை தமிழ் மக்கள் ஒரு போதும் விரும்பமாட்டார்கள். சிறிலங்கா அரசின் இக்கடும் போக்கை யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும் வன்மையாகக் கண்டிக்கின்றது. புதிய அரசை சந்திரிக்கா அமைத்தபோது போர் நிறுத்தமும், புரிந்துணர்வு உடன்பாடும் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும் என்று உறுதி கூறினார். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடரும் எனவும் கூறினார். ஆனால் அரசுத் தலைவி சந்திரிகாவின் உறுதிப்பாடற்ற தன்மையினால் பேச்சுவார்த்தை மேசைக்கு அவரால் வர முடியவில்லை. விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களைத் தொடராது விட்டதுடன் இடைக் கால தன்னாட்சி அதிகார சபையையும் சிறிலங்கா அரசு கையளிக்கத் தவறிவிட்டது. எனவே சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா அரசு தனது அசமந்தப் போக்கை கைவிட்டு எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்க வேண்டும் என யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் நடத்தவுள்ள கண்டனப் பேரணி எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை யாழ் நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலிலிருந்து ஆரம்பமாகி யாழ் நகரூடாக நகர்ந்து யாழ் மாவட்ட அரச செயலகத்தைச் சென்றடைந்து சிறிலங்கா அரசுத் தலைவருக்கான மனுவொன்றை யாழ் அரசு அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது. யாழ் மாவட்டத்திலுள்ள அரசு அரசசார்பற்ற நிறுவனங்களும், பொது அமைப்புக்கள், பாடசாலைச் சமூகம், பல்கலைக்கழகச் சமூகம், மற்றும் பொது மக்களும் இப்பேரணியில் ஒன்று கூடவுள்ளனர்.

### சுகாதார...

9ம் திகதி புதன்கிழமை காலை இந்த விடயத்தில் மாகாண சுகாதார அமைச்சின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு மறியல் போராட்டம் ஒன்றிலும் ஈடுபடவிருப்பதாக சுகாதார சேவை ஊழியர் சங்க கிழக்கு மாகாண அமைப்பாளர் ஆ.தங்கவடிவேல் ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பிற்குத் தெரிவித்தார்.

### ஜப்பானிய...

கத்தில் சந்தித்து உரையாடியது. இச்சந்திப்பின் போது மேலதிக அரசாங்க அதிபர் அஸங்க, திட்டப்பணிப்பாளர் எம்.ஏ. பாவா, கடற்றொழில் உதவி ஆணையாளர் ஜோர்ஜ் விவசாயப் பணிப்பாளர் றிபா உம்மா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்குழுவினர் நீர்ப்பாசனம், விவசாயம் கால்நடை வளர்ப்பு மீன்பிடி தொடர்பான தொடர்பான திட்டங்களை அபிவிருத்தி செய்யவும், சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும், போதைப் பொருள் பாவனைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், செயற்திட்ட அறிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அரசாங்க அதிபர் ஹேரத் அபேவீர தெரிவித்தார்.

போட்டோகொப்பி (டிஜிட்டல்), தொலைபேசி, தொலைநகல், கணினி விளையாட்டுக்கள், Typing, சீடிக்கள், மற்றும் ஏனைய தேவைகளுக்கும்....

MIDICITY.COM

1. கணினி இயக்குனர் (பெண்)
* தமிழ், அங்கிலம் ஆகியவற்றில் Typeing செய்யும் திறன்
* Adobe PageMakerரில் பக்கவடிவமைப்பு தெரிந்திருக்க வேண்டும்.
* கல்முனைப்பிரதேசத்தை அண்டியவராக இருக்க வேண்டும்.

2. விற்பனையாளர் (பெண்)
* சாதாரணதரத்தில் சித்தி
* கல்முனைப்பிரதேசத்தை அண்டியவராக இருக்க வேண்டும்.
* 20ம் திகதிக்கு முன் சுயவிபர கோவையை தபாலில் அனுப்பவும்.

116/3, பிரதானவீதி, கல்முனை. தொ.பே.067-2223981

### 45ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

தோற்றம்
02
10
1981



மறைவு
26
04
2004

சின்னத்தம்பி ரமேஸ்

*காலத்தின் கொடுமையா? காலன் அவன் சதியா.*
*அன்பு நிற வாழ்கையிலே அநாதையாய் எம்மைவிட்டு*
*அகலமாய் சென்றதேனோ? அறியாமல் தவிக்கின்றோம்*
*காலன் உங்களை கவர்ந்து விட்டாலும்*
*காலமெலாம் உங்கள் நினைவுகள்*
*எம் மனதில் நிலைத்திருக்கும்*

வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி ரமேஸ் அவர்கள் 26.04.2004 அன்று அம்பிளாந்துறையில் மரணமடைந்த செய்தி கேட்டு அவரின் இறுதிக் கிரியைகளிலும் 45ம் நாள் நினைவு கிரியைகளிலும் கலந்து கொண்ட உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் அப்பா, அம்மா, அண்ணன், தங்கை, மாமா, மாமி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்,
கண்ணன் சந்திரகலா
அம்பிளாந்துறை